www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

பிப்ரவரி 2012
ரூ.10.00



## ஜெயா – சசி – சோ:
# அதிகாரச் சூதாட்டம்!

படிப்பகம்

www.padippakam.com

# “மக்களின் உயிருக்கும் நாட்டின் அரைகுறை இறையாண்மைக்கும் உலைவைக்கும் கூடங்குளம் அணு உலையை இழுத்து மூடு!”
# “முல்லைப் பெரியாறு அணைய மீட்க எல்லையை மூடு! பொருளாதாரத் தடை போடு!”

## - தமிழகம் தழுவிய புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்-ஆர்ப்பாட்டம்

தமிழகத்தின் கூடங்குளம் அணு உலையை மூடக் கோரி ஆயிரக்கணக்கான மக்கள் நெல்லை, குமரி மாவட்டங்களில் நடத்திவரும் உறுதியான தொடர் போராட்டம் உலகின் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில், பன்னாட்டு நிறுவனங்களின் இலாபவெறிக்கான - மக்கள் விரோத கூடங்குளம் அணு உலையை மூடக் கோரியும்; முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் கேரள அரசின் அடாவடித்தனத்துக்கு எதிராக தேனி மாவட்ட மக்கள் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு போர்க்குணத்துடன் போராடிவரும் நிலையில், முல்லைப் பெரியாறு அணையில் தமிழகத்தின் நியாயவுரிமைக்காகவும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமது தோழமை அமைப்புகளுடன் இணைந்து தமிழகமெங்கும் வீச்சாகப் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.



நெல்லையில்...

‘‘மக்களின் உயிருக்கும் நாட்டின் அரைகுறை இறையாண்மைக்கும் உலை வைக்கும் கூடங்குளம் அணுஉலையை இழுத்து மூடு!’’ என்ற தலைப்பிலும், ‘‘முல்லைப் பெரியாறு அணையை மீட்க எல்லையை மூடு! பொருளாதாரத் தடை போடு!’’ என்ற தலைப்பிலும் இரு பிரசுரங்களை இவ்வமைப்புகள் வெளியிட்டுள்ளன. இப்பிரசுரங்களுடன் பேருந்து -ரயில், ஆலைவாயில், பள்ளிகள்-கல்லூரிகள், அரசு அலுவலகங்களில் பிரச்சாரம், சுவரொட்டி - காட்சி விளக்கப் படங்களுடன் தெருமுனைப் பிரச்சாரம், கருத்தரங்கம், ஆர்ப்பாட்டம் முதலான பல்வேறு வடிவங்களில் இப்பிரச்சார இயக்கம் தொடர்ந்து முன்னேறி வருகிறது.

சேலம் மாவட்ட மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் சார்பில் 16.12.2011 அன்று தலைமை அஞ்சலகம் அருகிலும், திருவண்ணாமலை ம.உ.பா.மையத்தின் சார்பில் 23.11 2011 அன்று காந்தி சிலை சந்திப்பு அருகிலும்‘‘பன்னாட்டு அணு உலை முதலாளிகளின் இலாபவெறிக்காக சொந்த நாட்டு மக்களைப் பலியிடாதே! அனல், நீர், காற்று, கடல் அலை, சூரிய ஒளி போன்ற சுயசார்பு மின்சார வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடு! தமிழக மக்களே, இந்திய அரசு; ஆர்.எஸ்.எஸ்; பா.ஜ.க; காங்கிரசு, சிவசேனா கும்பலின் பொய்ப் பிரச்சாரத்தை முறியடிப்போம்! நம் அனைவருக்காகவும் கூடங்குளம்-இடிந்தகரை மக்களின் போராட்டத்தில் இணைவோம்! மனித குல விரோத அணு உலைகளை நாட்டைவிட்டே விரட்டியடிப்போம்!’’ என்ற முழக்கத்துடன் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஆளும் கும்பல்களின் பொய்ப்பிரச்சாரத்தால் அறியாமையிலிருந்த மக்களுக்கு உண்மைநிலையைப் புரியவைக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டங்கள் அமைந்தன.

9.1.2012 அன்று மாலை கோவை மண்டல பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் காளையார் கோவில் கிளை சார்பாக கூடங்குளம் அணு உலையை மூடக் கோரியும், முல்லைப் பெரியாறு அணையில் தமிழகத்தின் நியாயவுரிமையை நிலைநாட்டக் கோரியும் எழுச்சியுடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திரளான பஞ்சாலைத் தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டம் சி.பி.எம். கட்சியின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தி, போராட அறைகூவுவதாக அமைந்தது.



கோவையில்...

பன்னாட்டு நிறுவனங்களின் இலாபவெறிக்கான மக்கள் விரோத கூடங்குளம் அணு உலையை மூடும்வரை போராடுவோம் என்ற தலைப்பில் கோவை ம.உ.பா.மையத்தின் சார்பில் 10.1.2012 அன்று கருத்தரங்கம் நடைபெற்றது. கோவைக் கிளைச் செயலர் வெங்கடேசன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், சட்டக்கல்லூரி மாணவி நதியா, அணுஉலைக்கு எதிரான மாணவர் பிரச்சார தொடர்வண்டி பயண அனுபவத்தையும், கூடங்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# 2-ஜி அலைக்கற்றை ஊழல் தீர்ப்பு:

# நுனி இது, அடி எது?

முன்னாள் தொலைதொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசாவால், 'முதலில் வருபவர்க்கு முதலில்' என்ற அடிப்படையில் 2008 - ஆம் ஆண்டில் வழங்கப் பட்ட 2 - ஜி அலைக்கற்றை உரிமங்கள், தன்னிச்சையாகவும் நேர்மையற்ற முறையிலும் பொதுநலனுக்கு விரோதமாகவும் வழங்கப்பட்டிருப்பதால், அவற்றை ரத்து செய்வதாக உச்ச நீதிமன்றம் கூறியிருக்கிறது. இந்த உரிமங் களைக் காட்டித் தமது நிறுவனங்களின் பங்குகளை விற்றுப் பல நூறு கோடி ரூபாய் ஆதாயமடைந்த எடிசாலட் டிபி, டெலினார், டாடா டோகோமோ ஆகிய நிறுவனங்களுக்கு தலா 5 கோடி ரூபாய் அபராதமும் விதித்துள்ளது. மிகவும் கறாரான தீர்ப்பாக ஊடகங்கள் இதனைச் சித்தரித்த போதிலும், இத் தீர்ப்பு நடந்துள்ள ஊழலைப் பற்றியதல்ல. உரிமங்கள் வழங்கும் முறையில் சட்டபூர்வமான வழிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்பதை மட்டுமே இத்தீர்ப்பு குறிப்பிடுகிறது. மற்றபடி, இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஆ.ராசா முதல் அதிகாரிகள் வரையிலான பலரின் குற்றத்தையும், குற்றவாளி யாக ப.சிதம்பரத்தைச் சேர்க்க வேண்டுமா என்பதையும் முடிவு செய்ய வேண்டியது சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றம்தான் என்று கூறியிருக்கும் இத்தீர்ப்பு, நடந்துள்ள முறைகேட்டிலிருந்து பிரதமர் அலுவலகத்தை நாசூக்காக விடு வித்திருக்கிறது. சிறப்பு நீதிமன்றமும், ''ப.சிதம்பரத்துக்கு இக்குற்றத்தில் தொடர்பில்லை'' என்று கூறியிருப்பதுடன், ''2001 - இல் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கே 2008 - இலும் அலைக்கற்றைகளை விற்பனை செய்தது, 2008 - இல் உரிமங்களைப் பெற்ற நிறுவனங்கள் தமது பங்குகளை விற்க அனுமதித்தது ஆகிய இரண்டு முடிவுகளில் மட்டுமே சிதம்பரத்துக்குத் தொடர்பிருக்கிறது என்றும், இவ்விரு செயல்களும் தம்மளவிலேயே குற்றங்கள் ஆகாது'' என்றும் கூறியிருக்கிறது.

தன்னுடைய அரசு வழங்கிய 122 உரிமங்களை முறைகேடானவை என்று கூறி ரத்து செய்திருக்கும் நிலையிலும், தன்னை விடுவித்துவிட்ட ஒரே காரணத் தினால் சிறிதும் வெட்கமில்லாமல் இத்தீர்ப்பை வரவேற்றிருக்கிறது பிரதமர் அலுவலகம். ''அலைக்கற்றை விற்பனையால் ஒரு பைசாகூட நட்டம் ஏற் படவில்லை'' என்று நேற்று வரை கூறிவந்த அமைச்சர் கபில்சிபல், அரசின் முடிவுக்குக் கட்டுப்படாமல் ஆ.ராசா ஊழல் செய்துவிட்டதைப் போல, தீர்ப்புக்குப் பின்னர் இன்று திரித்துப் பேசுகிறார். பிரதமரோ, நிதியமைச்சரோ, காங்கிரசு தலைமையோ இந்த ஊழலில் எந்த விதத்திலும் சம்பந்தப்பட வில்லை என்பது போலவும், ஆ.ராசா போன்ற நாலாந்தர ஊழல் அரசியல் வாதிகளால் இந்த மேன்மக்கள் ஏமாற்றப்பட்டுவிட்டதைப் போலவும் ஒரு சித்திரத்தை காங்கிரசு மட்டுமின்றி, எதிர்க்கட்சிகள், ஊடகங்களுடன், வழக்கு தொடுத்திருக்கும் சுப்பிரமணிய சாமியும் வழக்கை விசாரிக்கும் நீதிமன்றங் களும் சேர்ந்து உருவாக்கி வருகின்றனர். இது இமாலயப் பொய்.

பிரதமர், நிதியமைச்சர், தொலைதொடர்புத்துறை அமைச்சர் ஆகியோர் முன்னிலையில் ஜூலை 6, 2008 - இல் முடிவு எடுக்கப்பட்டதாக நிதித்துறை செயலரின் குறிப்பு கூறுகிறது. 2008 - லேயே ஊழல் புகார் எழுந்த பின்னரும் 2009 - இல் ஆ.ராசா அமைச்சராக்கப்படுகிறார். அவர் அமைச்சராக்கப்பட்டதில் டாடாவின் பாத்திரம் பற்றி ராடியா டேப் கூறுகிறது. 2008 - இல் புகார் எழுப் பியவர்கள் போட்டி நிறுவனங்களே என்றும் 2009 மே மாதத்தில் ராசாவை அமைச்சராக்க வேண்டாம் என்று தான் கருதுவதற்கு எந்த அடிப்படையும் இல்லை என்றும் பிப். 2010 தொலைக்காட்சிப் பேட்டியில் மன்மோகன் சிங் கூறுகிறார். கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கை வெளிவந்த பின்னரும் ராசாவின் முடிவில் தவறில்லை என்றே கபில்சிபல் பேசி வந்திருக்கிறார். டாடா டோகோமோ, எடிலசாட் டிபி போன்ற நிறுவனங்கள் தமது பங்கு

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 27 இதழ்: 4
பிப்ரவரி 2012

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561



படிப்பகம்

www.padippakam.com

**பிரதமரோ, நிதியமைச்சரோ, காங்கிரசு தலைமையோ இந்த ஊழலில் எந்தவிதத்திலும் சம்பந்தப்படவில்லை என்பது போலவும், ஆ.ராசா போன்ற நாலாந்தர ஊழல் அரசியல்வாதிகளால் இந்த மேன்மக்கள் ஏமாற்றப்பட்டு விட்டதைப் போலவும் ஒரு சித்திரத்தை நீதிமன்றங்களின் தீர்ப்புகள் வழங்கியுள்ளன.**





களை விற்றுக் கொள்ளை இலாபம் பார்ப்பதற்கு மைய அரசின் அந்நிய முதலீட்டு கமிசன் அன்று அனுமதி தந்துள்ளது. இன்று உச்ச நீதிமன்றம் 5 கோடி ரூபாய் அபராதம் விதித்துள்ள அந்த பங்கு விற்பனை நடவடிக்கையை நியாயமானது என்று சிதம்பரமும் மன்மோகன் சிங்கும் பேசியிருக்கின்றனர். பாரத ஸ்டேட் வங்கி, பஞ்சாப் நேஷனல் வங்கி, பாங்க் ஆப் பரோடா உள்ளிட்ட அரசு வங்கிகள், இன்று உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு 26,000 கோடி ரூபாய் கடனாகக் கொடுத்துவிட்டு விழிபிதுங்கி நிற்கின்றன. இவ்வளவு உண்மைகளையும் குழிதோண்டிப் புதைத்து விட்டு ராசாவும், தி.மு.க.வும், சில அதிகாரிகளும், சில முதலாளிகளும் மட்டும் இந்த ஊழலில் ஈடுபட்டதைப் போலக் காட்டிப் பலிகடா ஆக்குவதில் காங்கிரசு, பாரதிய ஜனதா, சு.சாமி, ஊடகங்கள், நீதிமன்றம் உள்ளிட்ட அனைவரும் ஒன்றுபட்டு நிற்கின்றனர்.

பொதுச்சொத்துகளைத் தனியாருக்குத் தரும்போது, முதலில் வருவோர்க்கு முதலில் என்ற வழிமுறையைப் பின்பற்றக் கூடாது என்றும், அது சிலரது கொள்ளைக்குப் பயன்படுவது தவிர்க்கவியலாதது என்பதால், அது சமத்துவம் மற்றும் நீதியான நடைமுறைக்கும் அரசியல் சட்டத்துக்கும் எதிரானது என்றும் தற்போதைய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு கூறுகிறது. ஆனால், முதலில் வருபவர்க்கு முதலில் என்ற பெயரில் 2001- இல் அருண் ஷோரி வகுத்த இந்த அடிமாட்டு விலைக் கோட்பாட்டின்படிதான் 95% அலைக்கற்றைகளை ஏர்டெல், ரிலையன்ஸ், டாடா, வோடஃபோன் உள்ளிட்ட நிறுவனங்கள் வாங்கியிருக்கின்றனர் என்றபோதிலும், இவர்களது உரிமங்களை ரத்து செய்ய மறுத்து, இவர்களுக்கு எதிராக யாரும் வழக்குப் போடவில்லை என்று சப்பை கட்டுகிறது.

2 - ஜி அலைக்கற்றை ஊழலைத் தொடர்ந்து, ஆன்டிரிக்ஸ்-தேவாஸ் அலைக்கற்றை ஊழல் அம்பலமானதும், உடனே அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக அரசு அறிவித்துவிட்டது. தற்போது இஸ்ரோவின் முன்னாள் தலைவர் மாதவன் நாயர் உள்ளிட்ட 4 விஞ்ஞானிகளைக் கருப்புப் பட்டியலில் வைப்பதாகக் கூறி, அவர்களைப் பலிகடா ஆக்க முயன்றது மத்திய அரசு. மத்திய அமைச்சரவைச் செயலர், பிரதமரின் தலைமைச் செயலர், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர், விண்வெளித்துறையின் கூடுதல் செயலர் உள்ளிட்டோர் அடங்கிய விண்வெளி கமிசனும், தற்போதைய இஸ்ரோ தலைவர் ராதாகிருஷ்ணன் பங்கேற்ற ஆன்டிரிக்ஸ் நிறுவனத்தின் தலைமைக் குழுவும்தான் தேவாஸ் உள்ளிட்ட பல நூறு ஒப்பந்தங்களை நிறைவேற்றியுள்ளன என்றும், எதுவும் எப்போதும் ஏலம் விடப்பட்டதில்லை என்றும் மாதவன் நாயர் கூறியிருக்கிறார். அதுமட்டுமின்றி, டாடா ஸ்கை,சன் உள்ளிட்ட பல நிறுவனங்களின் டி.டி.எச். சேவைக்கு செயற்கைக் கோள் ஏவும் பணியை இஸ்ரோதான் செய்கிறது என்றும், அவை ''தேவாஸைவிடப் பெரிய விவகாரங்கள்'' என்ற செய்தியும் இப்போது கசியத் தொடங்கியிருக்கிறது. விண்வெளி அமைச்சகம் பிரதமரின் கட்டுப்பாட்டில் இருப்பதால், விசயத்தை அமுக்குவதற்காக விஞ்ஞானிகளுடன் சமரசம் பேசத் தயார் என்று பல்டியடித்திருக்கிறது மையஅரசு.

பொதுச்சொத்துகளையும் இயற்கை வளங்களையும் தனியாருக்கு விற்பனை செய்யும்போது, முதலில் வருபவருக்கு முதலில் என்ற முறையைக் கடைப்பிடிக்க கூடாது என்றும் ஏலமுறையில்தான் நியாயமான போட்டியையும் வெளிப்படைத் தன்மையையும் உத்திரவாதப்படுத்த முடியும் என்றும் உச்ச நீதிமன்றம் தற்போதைய தனது தீர்ப்பில் கூறியிருக்கிறது. பொதுச்சொத்துகளைத் தனியார்மயமாக்கும் மறுகாலனியாக்கக் கொள்கையை ஒப்புக் கொண்டு, அதை நியாயமாகவும் வெளிப்படையாகவும் அமல்படுத்த வழிதேடுவது கேலிக்கூத்து. தனியார்மயம் என்பது நமது விருப்பத் தேர்வல்ல. அதுவே பன்னாட்டு முதலாளித்துவத்தின் நிர்ப்பந்தம்தான். அந்த நிர்ப்பந்தத்தின் இயல்பிலேயே உள்ள நியாயமற்ற ஆதிக்கத் தன்மையும் சுரண்டல் நோக்கமும்தான், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உள்ளிட்ட எல்லாவற்றையும் இரகசியமாக்கி, ஊழலை அவற்றின் உடன்பிறப்பாக்கியுள்ளது. மறைக்க முடியாத அளவுக்கு ஊழல் அம்பலப்பட்டு நாறும்போது ஆ.ராசா, கல்மாடி போன்ற சிலரையும், சில அதிகாரிகளையும் பலிகடாவாக்குவதன் மூலம் இந்த அமைப்பு முறை தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறது. நீதிபதிகளின் சொல்லிக் கொள்ளப்படும் நேர்மையும்கூட இந்த நோக்கத்துக்குத்தான் பயன்படுகிறது. ●



படிப்பகம்

www.padippakam.com

# காமராஜ் மெட்ரிக் பள்ளியின் கட்டணக் கொள்ளையைத் தூள்தூளாக்கிய பெற்றோர்களின் போராட்டம்!

**சி**தம்பரத்திலுள்ள காமராஜ் மெட்ரிக் பள்ளி நிர்வாகத்தின் கட்டணக் கொள்ளை - அட்டூழியத்துக்கு எதிராக மாணவர்களின் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கம் நடத்திய போராட்டத்தின்போது, சிதம்பரம் ஆர்.டி.ஓ. முன்பாக நடந்த முத்தரப்பு பேச்சுவார்த்தையின்படி தீர்மானிக்கப்பட்ட ஸ்மார்ட் கிளாசுக்கு உரிய கட்டணத்தை ஏற்க மறுத்து, தற்போது ஸ்மார்ட் கிளாசுக்கு ரூ.10,000 செலுத்த வேண்டுமென்றும், இதில் பாதிக் கட்டணத்தைச் செலுத்தினால்தான் அரையாண்டு விடைத்தாள் மதிப்பெண் பட்டியல் தருவோம் என்றும் அப்பள்ளியின் நிர்வாகிகள் கொக்கரிக்கின்றனர். கூடுதல் கட்டணம் செலுத்தாத மாணவர்களைத் தனியே தரையில் அமர வைத்து இழிவுபடுத்துவது, விடைத்தாள் மதிப்பெண் தர மறுப்பது, கட்டாய டி.சி. அனுப்பி பெற்றோர்களை மன உளைச்சலுக்கு ஆளாக்கித் துன்புறுத்துவது முதலான இப்பள்ளியின் அட்டூழியங்களைப் பற்றி மாவட்ட ஆட்சியருக்கும் கல்வித்துறை உயர் அதிகாரிகளுக்கும் இச்சங்கத்தினர் புகார் அனுப்பினர். விசாரணைக்கு வந்த மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் வலியுறுத்தியபோதிலும் நிர்வாகம் அசைந்து கொடுக்கவில்லை.

எனவே, அரசு உத்தரவை மயிரளவும் மதிக்காமல், கூடுதல் கட்டணம் கேட்டு மாணவர்களையும் பெற்றோரையும் துன்புறுத்தும் காமராஜ் மெட்ரிக் பள்ளி தாளாளர் மற்றும் முதல்வர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கக் கோரி, அனைத்துப் பள்ளிகளிலும் துண்டுப்பிரசுரங்கள் - சுவரொட்டி மூலம் பிரச்சாரத்தை மேற்கொண்ட மாணவர்களின் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கத்தினர், 100-க்கும் மேற்பட்ட பெற்றோரைத் திரட்டி 24.1.2012 அன்று பள்ளி முன்பாக முற்றுகைப் போராட்டத்தை நடத்தினர்.

போலீசார், மெட்ரிக் பள்ளி ஆய்வாளர், வட்டாட்சியர் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்திய போதிலும், பள்ளி நிர்வாகம் பணிய மறுத்தது. பெற்றோர்களும் விடைத்தாள் மதிப்பெண் பட்டியல் வாங்காமல் போகமாட்டோம் என்று உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். பந்தல் போடப்பட்டு வால்தெரு முற்றுகைப் போராட்டம் போல, அங்கேயே அடுப்பு மூட்டப்பட்டு தேநீரும் சிற்றுண்டியும் அனைவருக்கும் வழங்கப்பட்டது. பள்ளி நிர்வாகமோ, ஆசிரியர்களைத் தூண்டிவிட்டு உள்ளிருப்புப் போராட்டம் நடத்தியது. இதனால் பள்ளித் திடலில் குழந்தைகள் வெய்யிலில் அமர வைக்கப்பட்டனர். இக்கொடுமையைப் பார்த்து மேலும் பெற்றோர்கள் திரண்டதால், போராடுவோரின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போனது. போராட்ட ஒற்றுமையையும் உறுதியையும் கண்டு அதிகார வர்க்கமும் பள்ளி நிர்வாகமும் அரண்டு போனது.

பின்னர் இரவு 7 மணியளவில், வட்டாட்சியரும் போலீசு அதிகாரிகளும் பள்ளியின் துணை முதல்வரை அழைத்து வந்து, நாளை மாலைக்குள் விடைத்தாளை வழங்குவதாக உறுதியளித்து, போராட்டத்தைக் கைவிடக் கோரினர். இதை ஏற்றுக் கொண்ட பெற்றோர்கள், மறுநாள் 25 அன்று வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால், 26 அன்று குடியரசுத் தினத்தில் கருப்புக் கொடியேற்றிப் போராடுவோம் என எச்சரித்தனர். அதிகாரிகளும் பள்ளி நிர்வாகிகளும் அறிவித்த படியே, மறுநாள் அனைவருக்கும் விடைத்தாள் வழங்கப்பட்டது.



கல்விக் கொள்ளையர்களுக்கு எதிராக பெற்றோரைத் திரட்டி நடத்தப்பட்ட இப்போராட்டமும், அதில் உறுதியுடன் இருந்து வெற்றியைச் சாதித்திருப்பதும் மக்களிடம் விழிப்புணர்வூட்டி, இந்த வட்டாரமெங்கும் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

-பு.ஜ. செய்தியாளர்,
சிதம்பரம்.



படிப்பகம்

www.padippakam.com

## ஜெயா - சசி - சோ:

# அதிகாரச் சூதாட்டம்!

**அ.தி.மு.க.-விலிருந்து சசிகலா கும்பல் தூக்கியெறியப்பட்டு, அந்த இடத்தைப் பார்ப்பனக் கும்பல் கைப்பற்றியிருப்பதை உட்கட்சி விவகாரமாகச் சுருக்கிப் பார்க்க முடியாது.**

**க**டந்த ஆண்டு டிசம்பரில் தனது உடன்பிறவா சகோதரியும் அ.தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினருமான சசிகலா மற்றும் அவரது கணவர் நடராசன் உள்ளிட்ட நெருங்கிய உறவினர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களுடன் கட்சியினர் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்றும் அ.தி.மு.க. தலைவியும் தமிழக முதல்வருமான ஜெயலலிதா அறிவித்தார். அதைத் தொடர்ந்து சசிகலாவின் ஆதரவாளர்களாகக் கருதப்படும் அதிகாரிகளைக் களையெடுக்கும் அதிரடி நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

சசிகலா கும்பல் போயசு தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பது அ.தி.மு.க.வின் உட்கட்சி விவகாரம் என்று சித்தரிக்கும் சி.பி.எம். கட்சியின் மாநிலச் செயலாளர் ராமகிருஷ்ணன், இதற்கு ஜெயலலிதா மக்களிடம் விளக்கம் தர வேண்டும் என்று கோருகிறார். திருவாளர் ராமகிருஷ்ணன் சித்தரிப்பது போல, இது அ.தி.மு.க.வின் அற்பமான உட்கட்சி விவகாரமல்ல. இது ஆட்சியதிகாரம் சம்பந்தப்பட்ட, சட்டத்துக்குப் புறம்பாகத் தனது பினாமி கும்பலைக் கொண்டு அரசு எந்திரத்தை ஜெயலலிதா ஆட்டிப்படைத்த விவகாரம்.

கட்சியில் யாரை அமைச்சராக்குவது, யாரை நீக்குவது என்பது மட்டுமின்றி, எந்தெந்த போலீசு மற்றும் அரசு அதிகாரிகளை எங்கே, எந்தத் துறையில் நியமனம் செய்வது, இடமாற்றம் செய்வது - என அனைத்தையும் செயல்படுத்துவது வரை, ஜெயலலிதாவின் கண்ணும் காதும் மூக்கும் மூளையுமாக அவரது பினாமியாக சசிகலா கும்பல் இயங்கி வந்தது. சட்டத்துக்கு அப்பாற்பட்ட அதிகாரமாக, யாருக்கும் பதில் சொல்லக் கடமைப்படாத அதிகாரமாக இருந்த ஜெயாவின் பினாமியான இந்த கும்பலே ஆட்சியை நடந்தி வந்தது. ஜெயாவுக்காக இக்கும்பலிடம் கப்பம் கட்டி கடாட்சம் பெற்றதால்தான் அமைச்சர்களாகவும் அரசின் முக்கிய பொறுப்பு வகிக்கும் அதிகாரிகளாகவும் நியமனம் பெற முடியும். அதிகார போதையிலும், ஆடம்பர உல்லாச சொகுசு வாழ்க்கையிலும், இலஞ்ச - ஊழல், சொத்து சுகத்திலும் மூழ்கிக்கிடந்த ஜெயா, தன்சார்பாக இக்கும்பல் மூலம் நிர்வாகத்தை நடத்தி வந்தார். அதிகாரிகளுக்கு உத்தரவு போடுவதும், பெரு முதலாளிகளிடம் பேரம் நடத்துவதும், கோடிகோடியாகக் கொள்ளையடிப்பதும், கொள்ளையடித்த சொத்துக்களை தமிழகம் மட்டுமின்றி, வெளி மாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் ஜெயாவின் பினாமி சொத்தாகப் பதுக்கிவைப்பதுமாக அனைத்தையும் சசிகலா கும்பல்தான் கவனித்துக் கொண்டது. இத்திருப்பணியின் மூலம் இக்கும்பல் தனது பங்குக்கும் சொத்துக்களைக் குவித்துக் கொண்டது.

இவையெல்லாம் ஜெயாவுக்குத் தெரியாமல் நடக்கவில்லை. அனைத்தும் தெரிந்தேதான், அவரது ஒப்புதலுடன் - உத்தரவுப்படிதான் நடந்துள்ளது. ''உடன் பிறவா சகோதரி'', ''தியாகி'' என்றெல்லாம் புகழ்ந்து சசிகலா கும்பலை வளர்த்துவிட்டதே ஜெயலலிதாதான். பதவியேற்பின்போது சட்டவிரோதமாக சட்ட

ஆடம்பர உல்லாச சொகுசு வாழ்க்கையில் ஊறித்திளைக்கும் ஜெயலலிதாவின் பினாமி சசிகலாவும் பினாமியின் எஜமானி ஜெயலலிதாவும்.





படிப்பகம்

www.padippakam.com



பினாமி சொத்தை மீட்க தன்னையே விசாரணை அதிகாரியாக நியமித்துக் கொண்டு போலீசை ஏவி மிரட்டும் ஜெயலலிதாவின் கொட்டம்: கைது செய்யப்பட்டுள்ள சசிகலாவின் நெருங்கிய உறவினர்களான ராவணன், தினகரன்.

மன்றத்திலேயே துணை அவைத்தலைவர் இருக்கையில் சசிகலாவை அவர் அமர்த்திக் கொண்டார். சசிகலாவை அ.தி.மு.க.வினர் ''சின்னம்மா'' என்று அழைக்குமளவுக்கு போயசு தோட்ட மாளிகையில் மட்டுமின்றி, கட்சிக் கூட்டங்களிலும், தேர்தல் பிரச்சாரத்திலும், மகாமகத்தில் குளிக்கும்போதும் அவர் சசிகலாவை அருகிலேயே வைத்துக் கொண்டு அவருக்கு உயர் அதிகார முக்கியத்துவம் அளித்தார். சின்னம்மா சொன்னால் காரியம் நடக்கும், ஜெயலலிதாவின் மறுஅவதாரம்தான் சசிகலா என்பதாகியது. தேர்தலின் போது கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதி உடன்பாட்டுக்கான பேச்சுவார்த்தைகளை சசிகலா கும்பலைச் சேர்ந்த ராவணன், ராமச்சந்திரன் முதலானோர்தான் நடத்தினர். இறுதியில், உடன்பாடு ஏற்பட்டு ஒப்பந்தமாகும்போது கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்குப் பூங்கொத்து கொடுப்பதுபோல ஜெயா போட்டோவுக்கு போஸ் கொடுத்து வந்தார்.

நேற்றுவரை கருணாநிதியின் குடும்ப ஆட்சியைச் சாடி பிரச்சாரம் செய்துவந்த பார்ப்பன ஊடகங்கள் இப்போது சசிகலா கும்பலை ஜெயா வெளியேற்றியதும், இதுநாள்வரை ஜெயா ஆட்சியில் மன்னார்குடி மாஃபியா எனப்படும் சசி குடும்பத்தின் நிர்வாகத் தலையீடு இருந்ததாக எழுதுகின்றன. அவ்வாறு தலையீடு செய்ய அதிகாரமளித்தது யார்? யார் அந்தக் கும்பலை ஊட்டி வளர்த்தார்கள்? எப்படி இந்தக் கும்பலால் ஆட்டம் போட முடிந்தது? என்ற விவகாரத்திற்குள் இவை நுழைவதில்லை. இந்த பினாமி கும்பலின் எஜமானிதான் ஜெயா. இப்படி, தானே சட்டத்துக்குப் புறம்பாகத் தனது பினாமியாக சசிகலா கும்பலை வளர்த்துவிட்டு, இப்போது எதுவும் தெரியாதது போல ஜெயலலிதா நாடகமாடுகிறார். இத்தனை காலமும் தனது பினாமி கும்பலைக் கொண்டு ஆட்சியை நடத்தி வந்துள்ள ஜெயா, முதல்வர் பதவியில் நீடிக்க அருகதையில்லை என்று இந்த ஊடகங்கள் சாடுவதில்லை. சசிகலா கும்பலை உருவாக்கி வளர்த்துவிட்ட குற்றவாளியான ஜெயாவை எதிர்த்து வாய்திறப்பதுமில்லை.

அதற்கு மாறாக, 25 ஆண்டு காலம் தன்னுடன் இருந்த தோழியைப் பிரிவதால், உணர்வு ரீதியான கொந்தளிப்புகள் இருந்தாலும், அதனைச் சகித்துக் கொண்டு தமிழக மக்களின் நலனையே அவர் முன்னிறுத்திப் பாடுபடுகிறார் என்று ஜெயலலிதாவை மாபெரும் தியாகியைப் போலச் சித்தரிக்கின்றன. சசிகலா கும்பலின் ஊழலும் கொள்ளையும் பற்றி ஜெயலலிதாவின் கவனத்துக்குப் போயிருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக்காது என்றும், நம்பிக்கைத் துரோகத்துக்காக சசிகலா கும்பல் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளதாகவும், கோடிகோடியாகக் கொள்ளையடித்து அதை சசிகலா கும்பல் மட்டுமே தூக்கிக் கொண்டு ஓடியது போலவும் கதையளக்கின்றன. இக்கும்பலை வளர்த்து ஆதாயமடைந்துள்ள முதன்மைக் குற்றவாளியான ஜெயாவை இக்குற்றங்களிலிருந்து விடுவித்து, அவரைப் புனிதமானவராகக் காட்டி ஒளிவட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றன. பார்ப்பன ஊடகங்கள் சித்தரிப்பது போல, ஜெயாவுடனிருந்து கொண்டு நைச்சியமாக அவருக்குத் தெரியாமல், அவரை ஏமாற்றிவிட்டு இந்தக் கும்பல் ஊழல் கொள்ளையில் ஈடுபடவில்லை. பினாமி என்ற முறையில் ஜெயாவால் நியமிக்கப்பட்டு, அவரது ஆசியுடன்-ஒப்பதலுடன்தான் அது ஊழல் - 'கொள்ளை' - அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டு வந்தது.

கீழ்நிலை ஊழியர்களைக் கொண்டு அரசு அதிகாரிகளும் போலீசு அதிகாரிகளும் இலஞ்ச ஊழலில் ஊறித் திளைப்பதைப் போலத்தான், ஜெயலலிதாவும் தனது பினாமியான சசிகலா கும்பல் மூலம் ஊழல் கொள்ளையில் ஈடுபட்டு வந்தார். பங்கு போடுவதில் பிரச்சினை வரும்போதும் அல்லது அம்பலப்படும் போதும் தான் குற்றவாளி அல்ல என்று கீழ்நிலை ஊழியரை உயரதிகாரிகள் பலிகிடாவாக்குவதைப் போலத்தான், பங்கு போடுவதில் பிரச்சினை வந்ததும், தன்னை அப்பாவியாகக் காட்டிக்கொண்டு, பினாமி பணத்தையும் சொத்தையும் மீட்பதற்காகவும், பழி வாங்கவும் போலீசையும் உளவுத்துறையையும் ஜெயலலிதா ஏவிவிடுகிறார்.

இதுநாள்வரை சசிகலா கும்பல் மூலம் பலன்களைப் பங்கு போட்டுக் கொண்ட ஜெயலலிதா, சசிகலா கும்பலை வெளியேற்றியதும் இப்போது தன்னையே நீதிபதியாகவும் விசாரணை அதிகாரியாகவும் நியமித்துக் கொண்டு நில அபகரிப்பு, நிதிமோசடி முதலான குற்றங்களில் ஈடுபட்டதாக சசிகலாவின் நெருங்கிய உறவினர்கள் மீது போலீசை ஏவி நடவடிக்கை எடுக்கக் கிளம்பியுள்ளார். ஆனால், கோடநாடு எஸ்டேட் போன்றவற்றில் ஜெயாவும் சசிலாவும் வெளிப்படையாகவே பங்குதாரர்களாக இருப்பது போல, இத்தகைய எல்லா குற்றங்களிலும் ஜெயாவுக்கும் பங்கு உள்ளது. முன்பு வளர்ப்பு மகன் சுதாகரன் மீது, ஜெயாவின் போயசுத் தோட்டப் புதையலைக்



படிப்பகம்

www.padippakam.com

கைப்பற்றுவதற்காக போதை மருந்து வழக்கு போடப்பட்டதைப் போலவே, இப்போது இம் மாதிரியான காரியங்களுக்குச் சட்டவிரோதமாக போலீசும் உளவுத்துறையும் ஜெயாவினால் ஏவி விடப்படுகிறது.

இப்படி போலீசை சட்டவிரோதமாக ஜெயா பயன்படுத்துவதைப் பற்றி பார்ப்பன ஊடகங்கள் ஏன் கேள்வி எழுப்புவதில்லை? அண்ணா ஹசாரேவின் பின்னால் ஊழலை ஒழிக்க அணி திரளச் சொல்லும் 'அறிஞர்'களுக்கும் ஊடகங்களுக்கும், ஜெயாவின் பினாமி அதிகாரமாக இயங்கிய சசிகலா கும்பலும், அக்கும்பலை ஊட்டி வளர்த்து இலஞ்ச ஊழல்-அதிகார முறைகேடுகளில் ஈடுபட்ட கிரிமினல் குற்றவாளி ஜெயாவும் கண்ணில் படாமல் போனது ஏன்? இது சட்டவிரோதமானது என்று ஏன் இந்த 'அறிவாளி'களுக்குத் தெரிவதில்லை?



அதிகாரச் சூதாட்டத்தில் வெற்றி பெற்றுள்ள ராஜகுரு ராமஸ்வாமி அய்யருடன் சதியாலோசனை நடத்தும் ஜெயலலிதா.

அதிகாரத் தரகரான நீரா ராடியாவும் தரகுப் பெருமுதலாளி டாடாவும் ஆ.ராசாவைத் தொலைத்தொடர்பு அமைச்சராக்க ''லாபி'' செய்ததையும், அமைச்சர்களின் நியமனம் மற்றும் அமைச்சரவையின் உருவாக்கத்தில் கார்ப்பரேட் முதலாளிகளும் அதிகாரத் தரகர்களும் நேரடியாகத் தலையிடுவதையும் ராடியா டேப்புகள் அம்பலப்படுத்திக் காட்டின. சட்டத்துக்கு அப்பாற்பட்ட அதிகாரமாக இவர்கள் செயல்பட்டதைச் சாடியும், அமைச்சர் ராசா பதவி விலக வேண்டும் என்றும் அப்போது பெருங்கூச்சல் போட்ட பா.ஜ.க.வும் சோ-வும், அதேபோன்று சட்டத்துக்குப் புறம்பான தனது பினாமி கும்பலை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்திய ஜெயாவைப் பற்றி வாய்திறப்பதில்லை.

பெங்களூருவில் நடந்துவரும் சொத்துக்குவிப்பு வழக்கில் தீர்ப்பு வந்து, ஒருவேளை பதவியிழக்க வேண்டியிருந்தாலோ, அல்லது சிறைக்கு அனுப்பப்பட்டாலோ, ஆட்சியில் நீடிப்பதற்காகத் தனது விசுவாசியும் ஏற்கெனவே வாஜ்பேயி அரசில் சட்ட அமைச்சராக இருந்தவருமான தம்பிதுரையைத் தற்காலிக முதல்வராக்குவது என்கிற திட்டம் ஜெயாவிடம் இருந்தது. மறுபுறம், சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயா தண்டிக்கப்பட்டால், கட்சியைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, தமது விசுவாசிகளில் ஒருவரை முதல்வராக்க சசிகலாவும், அவரது கணவர் நடராசன் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களும் சதியாலோசனையில் ஈடுபட்டதாக செய்திகள் கசிந்துள்ளன.

சு.சாமி, துக்ளக் சோ, மறைந்த முன்னாள் அரசுத் தலைவர் வெங்கட்ராமன் முதலானோரைக் கொண்ட பார்ப்பன கும்பல், சசிகலா கும்பலிடமிருந்து ஜெயாவை மீட்க அக்கும்பலுடன் ஏற்கெனவே நீண்ட காலமாக அதிகாரச் சூதாட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளது. சசிகலா கும்பலின் சதியாலோசனை பற்றி உளவுத்துறை மூலம் ஜெயாவின் கவனத்துக்கு வந்ததாலும், மகாமகப் படுகொலை காலத்திலிருந்தே பினாமி அதிகாரத்துக்காக சசிகலா கும்பலுடன் போட்டி போட்டு வந்த பார்ப்பன கும்பல் இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஜெயாவை எச்சரித்ததாலும், சசிகலா கும்பலை ஜெயா வெளியேற்ற வேண்டியதாயிற்று. சசிகலா கும்பலுக்குப் பதிலாக, இப்போது அந்த இடத்துக்கு வந்துள்ள பார்ப்பன கும்பல் வேகமாகக் காய்களை நகர்த்தவும் தொடங்கிவிட்டது. தன்னை வெளியிலிருந்து பார்த்து விமர்சிப்பவராகக் காட்டிக் கொள்ளும் சோ, கடந்த ஜனவரி 14 அன்று நடந்த துக்ளக் வார இதழின் 42-வது ஆண்டு விழாக் கூட்டத்துக்கு இந்துவெறி பயங்கரவாத மோடியையும் அத்வானியையும் அழைத்துவந்து ஜெயலலிதாவுடன் கூட்டணிக்கு அச்சாரம் போட்டுள்ளார்.

சசிகலா நீக்கத்துக்குப் பிறகு, மயக்கத்திலிருந்து ஜெயா தெளிந்துவிட்டார் என்றும், கட்சியையும் ஆட்சியையும் புதிய பாதையில் செலுத்த நிர்வாகத் திறன்மிக்க ஜெயலலிதா புறப்பட்டுவிட்டார் என்றும் அதிகாரச் சூதாட்டத்தில் வெற்றி பெற்றுள்ள பார்ப்பன கும்பலின் ஊடகங்கள் ஜெயாவுக்குப் புகழாரம் சூட்டி வருகின்றன. ஆனால், போலீசை ஏவி அச்சுறுத்துவதைத் தவிர, நிர்வாகத் திறனற்ற ஜெயலலிதாவுக்கு இத்தகைய பினாமி கும்பல்களின் கொட்டத்தை கட்டுப்படுத்தவும் தெரியாது; ருசி கண்ட பூனையாக உள்ள இத்தகைய கும்பல்களைக் கட்டுப்படுத்திவிடவும் முடியாது. ஜெயலலிதாவின் பினாமியான சசிகலா கும்பல் மீதும், அப்பினாமி கும்பலைக் கொண்டு ஊழல்-கொள்ளையில் ஈடுபட்ட ஜெயலலிதாவின் மீதும் பகிரங்கமாக முழுமையான விசாரணை நடத்தி, அக்கும்பல்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து, உழைக்கும் மக்கள் தமது போராட்டத்தின் மூலம் குற்றவாளியான ஜெயாவைத் தண்டிப்பதுதான், இத்தகைய பினாமி கும்பல்களையும் அதன் மூலம் ஊழல் கொள்ளை, அதிகார முறைகேடுகளில் ஈடுபடும் ஆட்சியாளர்களையும் முடமாக்கும்.

● பாலன்



படிப்பகம்

www.padippakam.com




# குளோபல் ஃபார்மா டெக் நிர்வாகத்தின் ஒடுக்குமுறை - பொறுக்கித்தனம்! ஒத்தூதும் தமிழக அரசு!!

ஓசூர்சிப்காட்-1 பகுதியில் இயங்கிவரும் குளோபல் ஃபார்மாடெக் எனும் ஊசி மருந்து தயாரிக்கும் நிறுவனத்தில் நிரந்தரத் தொழிலாளர்கள் 196 பேர் உள்ளிட்டு, ஒப்பந்தத் தொழிலாளர்கள், பயிற்சியாளர்கள் என சுமார் 600 பேர் வரை பணிபுரிகின்றனர். கடந்த 16 ஆண்டுகளாகத் தொழிலாளர்களுக்குச் சட்டப்படி ஊதியமோ, சீருடையோ, போனசோ தரமறுத்துக் கொத்தடிமைகளாக நடத்தி வருகிறது, இந்நிறுவனம். பல்வேறு சங்கங்களில் திரண்டு நீண்டகாலமாகப் போராடியும் பலனில்லாத நிலையில், ஆறு மாதங்களுக்கு முன்பு குளோபல் ஃபார்மாடெக் தொழிலாளர் சங்கம் என்ற பு.ஜ.தொ.மு.வின் இணைப்புச் சங்கத்தில் சங்கத்தில் பெரும்பான்மை தொழிலாளர்கள் அணிதிரண்டு, ஊதிய உயர்வு கோரியும் நிர்வாகத்தின் அடக்குமுறை - பழிவாங்கலுக்கு எதிராகவும் போர்க்குணத்துடன் போராடி வருகின்றனர்.

இங்கு பணிபுரிந்துவரும் 196 நிரந்தரத் தொழிலாளர்களில் 174 பேர் குளோபல் ஃபார்மாடெக் தொழிலாளர் சங்கத்திலும், 18 பேர் ஏ.ஐ.டி.யு.சி. எனும் தொழிற்சங்கத்திலும் இணைந்துள்ளதால், இரண்டு சங்கங்கள் இந்நிறுவனத்தில் செயல்பட்டு வருகின்றன. அரசால் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பெரும்பான்மை சங்கமான குளோபல் ஃபார்மாடெக் தொழிலாளர் சங்கத்தை ஏற்க மறுத்தும் ஊதிய உயர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு வர மறுத்தும், சங்கத்தின் முன்னணியாளர்களைப் பணிநீக்கம் செய்தும் இந்நிறுவனம் மிரட்டி வருகிறது. எனவே, சட்டப்படிப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கக் கோரி தொழிலாளர் நலத்துறை அலுவலகத்தில் கடந்த 26.12.2011 அன்று இச்சங்கத்தினர் முறையிட்ட போது, தொழிலாளர் நல அலுவலர் திரு.முனியன், ''நீங்கள் லேபர் கோர்ட்டில் வழக்காடிக் கொள்ளுங்கள்'' என்று ஒருதலைப்பட்சமாக அறிவித்து விட்டு, சிறுபான்மைச் சங்கமான ஏ.ஐ.டி.யு.சி.யுடன் சட்டவிரோதமாகக் கொல்லைப்புற வழியில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

சிறுபான்மை சங்கத்தின் மூலம் துரோக ஒப்பந்தத்தைத் திணிக்க முயற்சிக்கும் இச்சதியை எதிர்த்தும், முதலாளிகளின் கைக்கூலியாகச் செயல்படும் தொழிலாளர் நல அலுவலர் திரு.முனியன் மற்றும் தொழிலாளர் துறை துணைத் தலைமை ஆய்வாளர் திரு.ஜெகதீசன் ஆகியோரைப் பணிநீக்கம் செய்யக் கோரியும், ஊதிய உயர்வு ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தையை நடத்தக் கோரியும் குளோபல் ஃபார்மாடெக் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் 4.1.2012 அன்று காலை கிருஷ்ணகிரி தொழிலாளர் நல அலுவலகம் முன்பாக எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்நிலையில், நிறைமாதக் கர்ப்பிணியான பெண் தொழிலாளி ஒருவர் உணவருந்தியதும் சிறிது நேரம் கண்ணயர்ந்த போது, குளோபல் ஃபார்மாடெக் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரியான ஏகாம்பரம் பொறுக்கித்தனமாக இதை இரகசியமாகப் படம் பிடித்து, பகிரங்கமாக வெளியிட்டு அவமானப்படுத்தியதோடு, தொழிலாளர்கள் வேலை நேரத்தில் உறங்கியதாகப் பொய்குற்றம் சாட்டி 30 பேரைப் பழிவங்கியுள்ளான். தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக நடத்திவரும் இந்நிறுவனம், போராடும் தொழிலாளர்களைப் பழிவாங்க எந்த அளவுக்குக் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபட்டு வருகிறது என்பதை நிர்வாக அதிகாரியின் இக்கீழ்த்தரமான செயல் படம் பிடித்துக் காட்டியுள்ளது.

இந்தப் பொறுக்கித்தனத்தைக் கண்டு வெகுண்டெழுந்த தொழிலாளர்கள், பெண்களின் உடை மாற்றும் அறையில் இரகசியமாகக் கேமராவில் புகைப்படம் எடுத்த நிர்வாக அதிகாரியான பொறுக்கி ஏகாம்பரத்தைக் கைது செய்யக் கோரி 11.1.2012 அன்று ஓசூர் - ராம்நகர் அண்ணாசிலை அருகே ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். பெண் தொழிலாளர்களின் கண்டன உரையும் எழுச்சிகரமான முழக்கங்களுமாக ஓசூர் நகரை அதிர வைத்தது, இந்த ஆர்ப்பாட்டம்.

-பு.ஜ. செய்தியாளர், ஓசூர்.



படிப்பகம்

www.padippakam.com

## கூடங்குளம்:

# இந்து முன்னணியின் காலித்தனம்

**பொதுமக்கள் தமது போராட்ட உரிமையைக் காப்பாற்றிக் கொள்வதற்குக்கூடத் தற்காப்புக்குழுக்களை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதையே இந்து முன்னணிக் கும்பல் நடத்திய தாக்குதல் எடுத்துக் காட்டுகிறது.**

**கூ**டங்குளம் அணு உலையை மூடக் கோரிப் போராடி வரும் அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் எஸ்.பி. உதயகுமார் மற்றும் அவ்வமைப்பினைச் சேர்ந்த எம். புஷ்பராயன், பாதிரியார் எம்.பி. ஜெசுராஜ் ஆகியோரை இந்து முன்னணிக் கும்பல் தாக்கிய சம்பவம், திட்டமிடப்பட்டு நடந்துள்ள தாக்குதல் என்பதில் இருவேறு கருத்துக்கு இடம் இருக்க முடியாது. அப்போராட்டக் குழுவினர் இப்பிரச்சினை குறித்து நடக்கவிருந்த நான்காம் கட்ட பேச்சுவார்த்தை தொடர்பாக மத்தியக் குழுவினரைச் சந்திக்க வரும் சமயத்தில், இந்து முன்னணிக் காலிகள் மத்தியக் குழுவைச் சந்தித்து மனு கொடுப்பது என்ற போர்வையில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முன்னரே வந்து காத்திருந்ததும், போராட்டக் குழுவினர் வந்த கார் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் நுழைந்ததுமே அக்காரை நோக்கி ஓடிவந்து தாக்கத் தொடங்கியதும் அக்கும்பலின் சதித் திட்டத்தை நிரூபிக்கின்றன.

எனினும், அக்கும்பல் இந்தளவிற்கு எதிர்த்தாக்குதல் பலமாக இருக்கும் என்பதைத்தான் எதிர்பார்த்திருக்காது. அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த இருபது பேருக்கும் குறைவான பெண்கள் உதயகுமார் உள்ளிட்டோர் வந்த காரைச் சூழ்ந்து நின்றுகொண்டு, அக்காலிக் கும்பலின் தாக்குதலிலிருந்து தமது தலைவர்களைக் காத்ததோடு, செருப்புகளைக் கழட்டி எதிர்த்தாக்குதல் தொடுக்கவும் துணிந்தனர். மேலும், அவர்கள் உடனடியாகவே தாக்குதல் நடத்திய இந்து முன்னணிக் காலிகளைக் கைது செய்யக் கோரி சாலை மறியல் போராட்டத்தில் இறங்கியதும்; இச்சம்பவத்தைக் கேள்விபட்ட கூடங்குளம், இடிந்தகரை, பெருமணல் என அப்பகுதியிலுள்ள பல கிராமங்களைச் சேர்ந்த 8,000-க்கும் மேற்பட்டோர் அணு மின்நிலையம் அருகே முற்றுகை போராட்டத்தில் குதித்ததும் இந்து முன்னணிக்கு மட்டுமல்ல, அணு உலை ஆதரவுக் கும்பல் அனைவருக்கும் சரியான பதிலடியாக அமைந்தது.

கூடங்குளம் அணு மின்நிலையத்தை மூடக் கோரி அப்பகுதி மக்கள் நடத்தி வரும் போராட்டம், நூற்று நாற்பது நாட்களைத் தாண்டித் தொய்வின்றி நடந்து வருகிறது. அணு உலையின் பாதுகாப்பு, அணு உலையிலிருந்து வெளிப்படும் கதிர்வீச்சினால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறித்துப் போராட்டக் குழுவினர் எழுப்பியுள்ள கேள்விகளுக்கு, மைய அரசு நேர்மையான பதிலை இதுவரை அளிக்கவில்லை. அணு மின் உற்பத்தி, அணு உலைகளின் பாதுகாப்பு, கதிர்வீச்சு பாதிப்புகள் குறித்துப் பொய்யான தகவல்களை அறிவியல் உண்மைகளைப் போல பிரச்சாரம் செய்யும் பித்தலாட்டத்தனம் மூலமும், போராட்டக் குழுவினரை மிரட்டுவது, அவர்கள் பற்றி அவதூறுகளை அள்ளி வீசுவது ஆகிய அதிகார அத்துமீறல்கள் மூலமும் இப்போராட்டத்தைப் பிசுபிசுக்கச் செய்துவிட முயன்று வருகிறது, மைய அரசு. இதற்காக அணு விஞ்ஞானிகள், நிபுணர்கள் உள்ளிட்ட அறிவுஜீவிகள் தொடங்கி சத்தியசீலன் என்ற ரவுடி வரை பல தரப்பட்டவர்களை இறக்கிவிட்டுள்ளது, மைய அரசு. இந்த விரிந்த சதித் திட்டத்தின் அங்கமாகத்தான் இந்து முன்னணிக் கும்பல் நடத்திய தாக்குதலைக் காண முடியும்.

இந்து முன்னணிக் காலிகளால் அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த பெண்கள் தாக்கப்படும் அட்டூழியம்.





படிப்பகம்

www.padippakam.com

கூடங்குளம் அணு உலை பிரச்சினையில் காங்கிரசும் இந்து மதவெறிக்கும்பலும் ஈருடல் ஓருயிர் என்பது போலவே நடந்து வருகிறார்கள். இருவருமே, தமிழக அரசு போராட்டக் குழுவினர் மீது போட்டுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட வழக்குகளைக் காட்டி, அவர்களை உடனே கைது செய்ய வேண்டும் எனச் சாமியாடுகிறார்கள். இந்து மதவெறிக் கும்பல் இப்போராட்டத்திற்கு கிறித்தவ மதச் சாயம் பூச முயலுகிறது என்றால், காங்கிரசு இப்போராட்டமே இந்தியாவின் வளர்ச்சியை விரும்பாத அந்நிய நாட்டின் சதி என முத்திரை குத்துகிறது. உதயகுமார் உள்ளிட்ட போராட்டக் குழுவினரை அந்நிய நாட்டுக் கைக்கூலிகள் எனவும், இப்போராட்டத்தை நடத்துவதற்கு அந்நிய நாட்டிலிருந்து பணம் வருகிறது எனவும் பிரச்சாரத்தை நடத்தி வரும் மைய அரசு, அதன் தொடர்ச்சியாக, இப்போராட்டத்தில் பங்கு பெற்றுள்ள தூத்துக்குடியைச் சேர்ந்த தூத்துக்குடி பல்நோக்கு சேவை மையம் என்ற கிறித்தவ தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் அலுவலகத்தின் வரவு - செலவுகள் குறித்து சோதனை நடத்தியது.

மைய அமைச்சர் நாராயணசாமி, ''இச்சோதனையில் தூத்துக்குடி பல்நோக்கு சேவை மையத்திற்கு அந்நிய நாடுகளிலிருந்து 54 கோடி ரூபாய் நன்கொடை கிடைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாக'' ஆரவாரமாக அறிவித்தார். பணம் வந்திருப்பதைக் கண்டுபிடித்த மைய அரசிற்கு அந்தப் பணம் எந்தெந்த நாடுகளிலிருந்து வந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பது பெரிய விசயமாக இருந்திருக்காது. ஆனால், பணம் வந்ததை மட்டும் கொளுத்திப் போட்டுள்ள அமைச்சர், இவ்வளவு பணத்தை அந்நிறுவனத்திற்குக் கொடுத்து இந்தியா வல்லரசாவதைத் தடுக்கத் துணிந்த அந்த நாடுகளின் பெயரை மட்டும் கூற 'மறந்துவிட்டார்'.

போராட்டக் குழுவின் வரவு-செலவு கணக்குகளை மைய அரசு சோதனையிட்டிருப்பதைத் தவறெனச் சொல்ல முடியாது தான். அதே சமயம், தனது அதிகாரத்தின் கீழுள்ள அணுசக்தித் துறையின் வரவு-செலவு கணக்குகளையும் ஒளிவு மறைவின்றி வெளியிட முன்வருமா என்பதுதான் கேள்வி.

ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டிலும் அணுசக்தித் துறைக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் நிதியாக ஒதுக்கப்படுகிறது. ஆனால், 1980 - ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரை அணுசக்தித் துறை தனது மின் உற்பத்தி இலக்கை எட்டியதேயில்லை. தானே நிர்ணயித்துக் கொண்ட இலக்கின்படி 2011 - ஆம் ஆண்டிற்குள் 50,000 மெகாவாட் மின் உற்பத்தியை எட்டியிருக்க வேண்டிய அணுசக்தித் துறை, தற்பொழுது வெறும் 2850 மெகாவாட் மின்சாரத்தை மட்டுமே உற்பத்தி செய்கிறது. உற்பத்தி இலக்கை எட்டாதபொழுது, ஒதுக்கப்பட்ட நிதி செலவழிந்தது எப்படி எனக் கணக்குக் கேட்டால், தேசப் பாதுகாப்பு தொடர்பான இரகசியத்தைக் கேட்டுவிட்டதாகக் கூச்சல் போட்டுத் தப்பித்துக் கொள்கிறார்கள், அணுசக்தித் துறை விஞ்ஞானிகள்.

கூடங்குளம் பிரச்சினை தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள மத்தியக் குழுவிற்கும், போராட்டக் குழுவைச் சேர்ந்த புஷ்பராயன், பாதிரியார் ஜேசுராஜ் ஆகியோரையும் உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ள மாநிலக் குழுவினருக்கும் இடையே இதுவரை மூன்று முறை பேச்சுவார்த்தை நடந்து முடிந்துவிட்டாலும், ''கூடங்குளம் திட்டம் பற்றி நாங்கள் கேட்டுள்ள அடிப்படையான கேள்விகளுக்கு மத்தியக் குழு இதுவரை எந்த விவரமும் அளிக்கவில்லை'' எனக் குற்றஞ்சுமத்தியுள்ளனர், போராட்டக் குழுவினர். வரவு - செலவு கணக்குகளைப் போலவே இந்த விசயத்திலும், ''போராட்டக் குழுவினர் நாட்டின் இரகசியத்தோடு தொடர்புடைய விவரங்களைக் கேட்கிறார்கள்'' எனப் பழிபோட்டுத் தப்பித்துக் கொள்கிறது, மத்தியக் குழு. போராட்டக் குழுவினர் அமைத்திருக்கும் நிபுணர் குழுவோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் மத்தியக் குழு அடாவடித்தனமாக மறுத்து வருகிறது.

தம்மையும் தமது தலைவர்களையும் தற்காத்துக் கொள்ள இந்து முன்னணிக் காலிகளைத் திருப்பித் தாக்கும் போராட்டக் குழுவைச் சேர்ந்த பெண்களின் வீரம்.



கல்பாக்கம் அணு மின் நிலைய நிர்வாகம் சமீபத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு, ''இப்பகுதியில் கடந்த பதினைந்து ஆண்டுகளில் 7பேர் எலும்புப் புற்றுநோயாலும் 7 பேர் எலும்பு மஜ்ஜை புற்றுநோயாலும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும்; இவர்களுள் 11 பேர் மின்நிலைய ஊழியர்களின் குடும்பத்தினர் என்றும், மீதி 3 பேர் மின் நிலையத்தையொட்டி வசிக்கும் உள்ளூர்வாசிகள் என்றும், கடந்த 15 ஆண்டுகளில் இவ்விரு புற்றுநோய்கள் தாக்கி 9 பேர் இறந்து போயிருப்பதாகவும், இந்த 9 பேரில் 3 பேர் அணுமின்நிலையத்



படிப்பகம்

www.padippakam.com

தில் வேலைபார்த்து ஓய்வு பெற்றுவிட்ட அதிகாரிகள், மீதி 6 பேர் மின் நிலைய ஊழியர்களின் குடும்பத்தினர்'' எனப் பதில் அளித்திருக்கிறது. இதுவொருபுறமிருக்க, 1996 தொடங்கி 2009 வரையிலான 14 ஆண்டுகளில் மார்பகப் புற்றநோய், கருப்பை/கருமுட்டை புற்றுநோய், தைராய்டு மற்றும் நுரையீரல் புற்றுநோய் உள்ளிட்ட 11 வகையான புற்றுநோய்களால் கல்பாக்கம் அணு மின்நிலைய ஊழியர்கள் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த உள்ளூர்வாசிகளென 244 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அந்நிர்வாகம் பதில் அளித்திருக்கிறது.

**போராட்டக் குழுவின் வரவு-செலவு கணக்குகளை மைய அரசு சோதனையிட்டிருப்பதைத் தவறெனச் சொல்ல முடியாதுதான். அதே சமயம், தனது அதிகாரத்தின் கீழுள்ள அணுசக்தித் துறையின் வரவு-செலவு கணக்குகளையும் ஒளிவு மறைவின்றி வெளியிட முன்வருமா என்பதுதான் கேள்வி.**

''எலும்பு மஜ்ஜை மற்றும் எலும்புப் புற்றுநோய், குறிப்பாக அணுக்கதிர்வீச்சால் உண்டாகக்கூடியவை'' எனக் குறிப்பிடும் கல்பாக்கம் பகுதியைச் சேர்ந்த மருத்துவர் புகழேந்தி, ''கல்பாக்கம் அணு மின்நிலைய நிர்வாகம் தந்துள்ள பதில்களையே ஆதாரமாக வைத்து முழுமையான, வெளிப்படையான ஆய்வை அரசோ, அணு மின்நிலைய நிர்வாகமோ நடத்த வேண்டும்; அல்லது, வீடுவீடாகச் சென்று ஆய்வு நடத்த எங்களை அனுமதிக்க வேண்டும்'' எனக் கோரியுள்ளார்.

''அணுஉலையிலிருந்து வெளிப்படும் கதிர்வீச்சை அனுமதிக்கத்தக்க, பாதுகாப்பான கதிர்வீச்சு; அதனால், மனிதர்களுக்கோ, சுற்றுச்சூழலுக்கோ, கடல்வாழ் உயிரினங்களுக்கோ எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது'' என அணுமின் விஞ்ஞானிகளும், அவர்களது அல்லக்கைகளும் கூறி வருவது கடைந்தெடுத்த பொய் என்பது இதிலிருந்து நிரூபணமாகிவிட்டது. எனினும், இந்தப் பொய்யைத் துணிந்து அறிவியல் கருத்தரங்குகள் என்ற பெயரில் தமிழக நகர்ப்புறங்களிலும் கல்லூரிகளிலும் பிரச்சாரம் செய்துவருகிறது, அணுசக்தித் துறை. இந்தப் பொய்யை வளர்ச்சி என்ற பெயரில் காங்கிரசும் இந்து முன்னணியும் நகர்ப்புற நடுத்தர வர்க்கமும் நியாயப்படுத்தி வருகின்றன. அதேசமயம், அறிவியலுக்கும் மக்களுக்கும் எதிரான இந்தப் பொய்யை, அணுசக்தி என்ற போர்வையில் நாட்டை அமெரிக்க மேலாதிக்கத்திற்கு அடகு வைப்பதை எதிர்த்துப் போராடுபவர்களைத் தேச விரோதிகள், அந்நியக் கைக்கூலிகள் என இந்தக் கும்பல் முத்திரை குத்துவதோடு, தாக்கவும் துணிகிறது.

ஒருபுறம் இப்போராட்டத்தை ஆதரிப்பது போலக் காட்டிக் கொண்டு, இன்னொருபுறம் போராடும் மக்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் உள்ளிட்டுப் பல்வேறு கொடிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து வைத்திருக்கிறது ஜெயா அரசு. மறுகாலனியாக்க நடவடிக்கைகளுக்கு எதிராகவும், தமது வாழ்வுரிமைக்காகவும் போராடும் மக்களை ஆளும் வர்க்கம் போலீசை வைத்து மட்டும் ஒடுக்குவதில்லை. பாசிச குண்டர் படைகளை இறக்கி விட்டுத் தாக்குதல் தொடுத்து, பின்னர் இரு தரப்பினருக்குமிடையே அமைதியை நிலைநாட்டுவதாகக் கூறிக்கொண்டும் அடக்குமுறையை ஏவுகிறது. தமது வாழ்வுரிமைக்காகப் போராடும் மக்கள், தங்களது போராட்ட உரிமையைக் காப்பாற்றிக் கொள்வதற்கே கூட தற்காப்புக் குழுக்களை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதையே இந்தத் தாக்குதல் எடுத்துக் காட்டுகிறது.

இந்து முன்னணிக் காலிகள் நடத்திய தாக்குதலைக் கண்டித்து, கூடங்குளம், இடிந்தகரை, பெருமணல் உள்ளிட்ட அப்பகுதியிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த 8,000 - க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கூடங்குளம் அணு உலை முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டம்.



முல்லைப் பெரியாறு, காவிரி எனத் தமிழகத்தின் உயிர் நாடியான பிரச்சினைகளில் தொடர்ச்சியாகத் துரோகம் இழைத்துவரும் காங்கிரசு மற்றும் இந்து மதவெறிக் கும்பல்களுக்கு, கொடுக்க வேண்டிய தண்டனையைக் கொடுக்கத் தவறியதனால்தான், தமிழகத்தின் எதிர்கால நலனுக்காகப் போராடி வரும் கூடங்குளம் மக்களை தாக்கும் அளவுக்கு அவர்கள் துணிந்திருக்கின்றனர். இது நமது தன்மானத்திற்கு விடப்பட்டுள்ள சவாலாகும்.

● குப்பன்



படிப்பகம்

www.padippakam.com


நக்கீரன் அலுவலகத்தைக் கும்பல் கும்பலாக வந்து தாக்கும் அ.தி.மு.க. குண்டர்கள்.

## மாமி – மாட்டுக் கறி – நக்கீரன்:

# பார்ப்பனக் கும்பலின் தீண்டாமை வெறி!

**ஜெயா குறித்து நக்கீரன் வெளியிட்ட கிசுகிசு செய்தியைவிட, இப்பிரச்சினையில் ஜெயாவின் துதிபாடிகள் வெளிப்படுத்திய தீண்டாமை மனோபாவம்தான் அருவருக்கத்தக்கது.**

ஜெயலலிதாவை அ.தி.மு.க.வின் கொள்கை பரப்புச் செயலாளராக எம்.ஜி.ஆர். நியமித்த போது கே.ஏ.கிருஷ்ணசாமி, எஸ்.டி.சோமசுந்தரம், பொன்னையன் ஆகியோர், ஜெயலலிதா பார்ப்பனர் என்பதைச் சுட்டிக்காட்டி, அதனை ஆட்சேபித்தார் களாம். ''மாட்டுக்கறி சாப்பிடுகிற அம்முவை எப்படி பிராமின்னு நினைக்கிறீங்க?''என்று எம்.ஜி.ஆர் அவர் களுக்குப் பதிலளித்தாராம். இப்படி ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்து தனக்கு நெருங்கியவர்களிடம் சமீ பத்தில் ஜெ. பேசிக்கொண்டிருந்ததாக ஒரு செய்தியை நக்கீரன் (Vol.24, No.76, ஜன.07 - 10) வெளியிட்டது.

உடனே அம்மாவின் விசுவாசிகள் கும்பல் கும் பலாக வந்து, போலீசின் பாதுகாப்போடு நக்கீரன் அலு வலகத்தைத் தாக்கிவிட்டுச் சென்றார்கள். அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் கலைராஜன் நக்கீரன் அலுவலத் துக்கு அருகே அமைந்துள்ள ஜாம்பஜார் போலீசு நிலை யத்தையே கண்ட்ரோல் ரூமாக மாற்றிக் கொண்டு, அங் கிருந்தபடி மேற்படி போரை வழிநடத்தியதாக பத்தி ரிகை செய்திகள் கூறுகின்றன. இந்தப் போரில் உயிர்ச் சேதம் இல்லையே தவிர, மற்றபடி தினகரன் அலு வலகத் தாக்குதலுக்கும் இதற்கும் 'கொள்கைரீதியாக' வேறுபாடு ஏதும் இல்லை.

அம்மாவின் படம் தாங்கிய அட்டையுடன் பத்திரி கையைக் கொளுத்துவது அம்மாவை அவமதிப்பதாக ஆகிவிடும் என்பதால், அம்மாவைப் பிய்த்துக் குப்பை யில் வீசி விட்டு, உள்பக்கங்களை மட்டும் கொளுத்தி னார்கள் உடன்பிறப்புகள். இதழை விற்கக்கூடாதென பெட்டிக்கடைக்காரர்கள் மிரட்டப்பட்டனர். ஏவல் துறை நக்கீரன் அலுவலகத்திற்குள் புகுந்து தேடுதல் வேட்டை நடத்தியது. நக்கீரன் அலுவலகத்துக்கு மட்டும் மின்சாரத்தை நிறுத்துவது ஜனநாயக உரிமையைப் பறிப்பதாக இருக்கும் என்பதால், அந்த வட்டாரம் முழுவதும் மின்சாரம் நிறுத்தப்பட்டது. நக்கீரன் ஆசிரியர் கோபால் மற்றும் துணை ஆசிரியர் காமராஜுக்கு எதிராகத் தமிழகத்தின் பல பகுதிகளில் அம்மாவின் விசுவாசிகளால் பல்வேறு குற்றப்பிரிவு களின் கீழ் புகார்கள் பதியப்பட்டன.

கிசுகிசு செய்திகளை நக்கீரன் மட்டுமின்றி, ஜூ.வி., ரிப்போர்ட்டர், தினமணி, தினமலர், தினகரன் முதல் உலக உத்தமர் சோ வரை அனைவரும்தான் பிரசுரிக் கின்றனர். கிசுகிசுக்கள் மட்டுமின்றி, போயசு தோட்டம், கோபாலபுரம், சி.ஐ.டி. காலனி முதல் வெள்ளை மாளிகை வரையில் எங்கே என்ன பேசிக் கொண்டாலும், அவை அடுத்த வார தமிழ் பத்திரி கையில் எழுதப்பட்டு விடுகின்றன. ஜெ - சசி மோதல் போயசுத் தோட்டத்துக்குள்ளே எப்படி நடந்தது, யார் என்ன வசனம் பேசினார்கள் என்பது குறித்து, பல ''ஸ்கிரிப்டுகள்'' நக்கீரன், ஜூ.வி., ரிப்போர்ட்டர் உள்ளிட்ட பல பத்திரிகைகளிலும் வெளிவந்தன. ''நான் பேசியது உனக்கெப்படி தெரியும்?'' என்று அப் போதெல்லாம் அம்மா கோர்ட்டுக்குப் போகவில்லை.

''நக்கீரன் இதழ் ஜெயாவின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றி எந்தச் செய்தி வெளியிட்டாலும், அவரின் கருத்தையும் கேட்ட பிறகுதான் வெளியிட வேண்டும் என ஏற்கெனவே உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கும் பொழுது, அதனை மீறி நக்கீரன் இதழ் இந்த மாட்டுக் கறி செய்தியை வெளியிட்டிருப்பது நீதிமன்றத்தையே அவமதிப்பதாக இருந்ததால், தமிழக அரசின் சார்பில்



படிப்பகம்

www.padippakam.com

வழக்கு தொடரப்பட்டது. மேற்படி கட்டுரையின் மூலம் அவமதிக்கப்பட்டிருப்பது நீதிமன்றம்தான் என்பதைப் புரட்சித்தலைவி தெளிவுபடுத்திய பின்னரும், ''ஆத்தாளுக்கு விளக்கு போட்டு, வருத்தத்தை அம்மாவிடம் தெரிவிக்குமாறு'' நக்கீரனுக்கு உத்தரவிட்டது நீதிமன்றம். நக்கீரன் வருத்தமும் தெரிவித்து விட்டது.

இருப்பினும் அவமதிப்பை ஏற்படுத்திய இதழ் கடைகளிலிருந்து அநேகமாகப் பறிமுதல் செய்யப்பட்டு விட்டதால், எதற்காக இந்தத் தண்டனை என்பதை வாசகர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. நக்கீரன் அலுவலகம் தாக்கப்பட்டது பற்றிச் செய்தி வெளியிட்ட இந்து நாளேடு, ஏன் தாக்கப்பட்டது என்பதை விளக்குமுகமாக, நக்கீரனின் மாட்டுக்கறி கதையை வெளியிட்டிருந்தது. மாட்டுக்கறி மேட்டரை ஆங்கிலத்தில் கிளப்புவது, பாரதிய ஜனதா ஆதரவுடன் தான் பிரதமராகும் வாய்ப்பைக் கெடுப்பதற்குத்தான் என்பது புரட்சித் தலைவிக்குத் தெரியாதா என்ன? அதனால்தான் நீதிமன்றத்தை அவமதித்து விட்டதாக நக்கீரன் மீது வழக்கு போட்ட ஜெ., தன்னை அவமதித்து விட்டதாக இந்து ஆசிரியர் என்.ராம் மீது நீதிமன்றத்தில் கிரிமினல் புகார் கொடுத்துள்ளார். என்.ராம் மீது நில அபகரிப்பு புகார், கோபால் மீது கொலை மிரட்டல் புகார் என்று சிறப்பு நீதிமன்றம் அமைக்கும் அளவு வழக்குகள் சேர்ந்து கொண்டிருக்கின்றன. நாம் விசயத்துக்கு வருவோம்.

நக்கீரன் குறிப்பிட்டுள்ள சம்பவத்தில் தொடர்புடைய எம்.ஜி.ஆர்., எஸ்.டி. சோமசுந்தரம், கே.ஏ. கிருஷ்ணசாமி ஆகிய மூவர் மட்டுமின்றி, சம்மந்தப்பட்ட (அல்லது படாத) மாடும் உயிரோடு இல்லை என்பதால், அவர்கள் கருத்தை அறிய முடியவில்லை. உயிரோடு இருக்கும் பொன்னையன், தொடர்ந்து உயிரோடு இருக்க விரும்புவதால், புரட்சித்தலைவர் அப்படி சொல்லவே இல்லை என்றும் அப்படியொரு சம்பவமே நடக்கவில்லை என்றும் கூறியிருக்கிறார். மேலும், புரட்சித்தலைவிக்கு சமைக்கவே தெரியாது என்பதால், புரட்சித்தலைவர் அப்படிச் சொல்லியிருக்கவே முடியாது என்றும் அம்மாவுக்கு சமைக்கத் தெரியும் என்று கூறியிருப்பதே அபாண்டமானதொரு அவதூறு என்ற கோணத்திலும் இதனைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். நடுநிலையாளர்களான சோ ராமஸ்வாமி, தினமணி ஆசிரியர் வைத்தியநாதன் போன்றோர், ''ஜெயாவின் புகழுக்கும், நற்பெயருக்கும், செல்வாக்கிற்கும் களங்கம் விளைவிக்கும்'' நோக்கில்தான் நக்கீரன் இச்செய்தியினை வெளியிட்டிருப்பதாகக் குறிப்பிட்டுக் கண்டித்துள்ளனர்.

அவ்வளவு பயங்கரமான அவதூறு அந்த செய்தியில் என்ன இருக்கிறது? 'மாமி' என்ற சொல்லை யாரும் அவதூறாகக் கருத வாய்ப்பில்லை. 'நான் ஒரு பாப்பாத்திதான்' என்று சட்டமன்றத்தில் கம்பீரமாக அறிவித்துக்கொண்டவர் அம்மா. எஞ்சியிருப்பது மாட்டுக்கறி மட்டும்தான். ஜெயா மாட்டுக் கறி உண்ணும் பழக்கமுடையவர் என்பது மட்டுமின்றி, எம்.ஜி.ஆருக்கு மாட்டுக் கறி சமைத்தும் போட்டதாக நக்கீரன் கூறியுள்ளது. அவாள் இவாள் எல்லாம் கூச்சலிடுவதும், குமுறுவதும் இதற்காகத்தான்.

மாட்டுக் கறியை மிகக் கேவலமான உணவாகவும் அதனை உண்போரை - குறிப்பாக, தாழ்த்தப்பட்டோரையும், முசுலீம்களையும் - தீண்டத்தகாதவர்களாகவும் கருதும் பார்ப்பன - ஆதிக்க சாதி மனோபாவத்திலிருந்துதான் நக்கீரன் வெளியிட்டுள்ள செய்தியைக் கண்டு பார்ப்பனக் கும்பல் குதிக்கிறது. இப்பிரச்சினையில் பார்ப்பனக் கும்பல் வெளிப்படுத்தும் சாதி வெறியும், தீண்டாமை வெறியும்தான் அநாகரிகமானது, கண்டிக்கத்தக்கது. நியாயமாக, மாட்டுக் கறி குறித்த தீண்டாமை மனோபாவத்தை வெளிப்படுத்தியிருக்கும் இப்பார்ப்பனக் கும்பலின் மீதுதான் வன்கொடுமை சட்டம் பாய்ந்திருக்க வேண்டும். ஆனால், மாட்டுக் கறி உண்பது கேவலமானது என்ற பார்ப்பன - ஆதிக்க சாதி மனோபாவம் நீதிமன்றம் வரை புரையோடியிருக்கிறதே! நீதிமன்றத்தின் மீது யார் வன்கொடுமை வழக்கு தொடுப்பது?

எனவே, பிரச்சினையை வேறு கோணத்திலிருந்து தான் அணுக வேண்டும் போலும்! வேதத்துக்கு இணையான தொன்மை வாய்ந்ததும், வேதங்களால் விதந்து போற்றப்பட்டதும், தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் இனியதும், யாக்ஞவல்கியர் முதலான உபநிடத கால முனிவர்களால் விரும்பிச் சுவைக்கப்பட்ட புனித உணவுமான மாட்டிறைச்சியை இழிவுபடுத்திய தன் மூலம், வேத-இதிகாசங்களை இழிவுபடுத்தி, தங்கள் மனதைப் புண்படுத்தியதற்காகவும் துக்ளக், தினமணி போன்ற பத்திரிகைகள் மீது 'ஹிந்துக்கள்' வழக்கு தொடுக்கலாம். மாட்டுக் கறியின் புனிதத் தன்மையை நிறுவுவதற்கான அசைக்க முடியாத வேத சாத்திர ஆதாரங்களைப் பேராசிரியர் ஜா எழுதிய பசுவின் புனிதம் நூலிலிருந்து அவர்கள் திரட்டிக் கொள்ளலாம்.

**மாட்டுக் கறி சமைத்தார், சுவைத்தார் என்பன போன்ற புனிதமற்ற அவதூறுகள் மூலம் ஜெயலலிதாவின் புகழுக்கும் நற்பெயருக்கும் களங்கம் கற்பித்துவிட்டதாகக் குமுறும் ஹிந்து தர்மத்தின் காவலர்கள், எம்.ஜி.ஆர். இறந்தவுடன் தானும் உடன்கட்டை ஏறப்போவதாகச் சொல்லி, தனக்குத்தானே களங்கம் கற்பித்துக் கொண்டாரே செல்வி ஜெயலலிதா, அந்தக் 'களங்கத்தை' எந்த நீதிமன்றத்தில் கழுவுவார்கள்?**



படிப்பகம்

www.padippakam.com

மாட்டுக் கறி சமைத்தார், சுவைத்தார் என்பன போன்ற புனிதமற்ற அவதூறுகள் மூலம் ஜெயலலிதாவின் புகழுக்கும் நற்பெயருக்கும் களங்கம் கற்பித்து விட்டதாகக் குமுறும் ஹிந்து தர்மத்தின் காவலர்கள், எம்.ஜி.ஆர். இறந்தவுடன் தானும் உடன்கட்டை ஏறப் போவதாகச் சொல்லி, தனக்குத்தானே களங்கம் கற்பித்துக் கொண்டாரே செல்வி ஜெயலலிதா, அந்தக் 'களங்கத்தை' எந்த நீதிமன்றத்தில் கழுவுவார்கள்? ''திருவளர்ச்செல்வியோ நான் தேடிய தலைவியோ என்ற பாட்டின் மூலம் என்னை அடையாளம் காட்டினார் புரட்சித் தலைவர்'' என்று சில மாதங்களுக்கு முன் சட்டமன்றத்தில் ஜெயலலிதா பாட்டுப் பாட, அதனை மேசையைத் தட்டி வரவேற்றார்களே ரத்தத்தின் ரத்தங்கள், அந்த மானக்கேட்டுக்கு எந்தக் கோவாலு மீது கேஸ் போடுவது?

திருவளர்ச்செல்வியின் தனிப்பட்ட வாழ்க்கை புரட்சித்தலைவியின் பொதுவாழ்க்கையைப் பிரசவிக்கிறது. மறுகணமே புரட்சித்தலைவியின் பொதுவாழ்க்கை, ''அன்புத்தோழி, வளர்ப்புமகன், கோடநாடு எஸ்டேட்..'' என்று தனிப்பட்ட வாழ்க்கையைக் கருத்தரிக்கிறது. பிறகு தோழிகளுக்கிடையில் வெடித்த தனிப்பட்ட முரண்பாடுகள், தமிழகத்தில் ஒரு 'அரசியல் புயலை' உருவாக்குகின்றன. பொதுவாழ்க்கையிலிருந்து ஊழலை ஓட ஓட விரட்டுகிறார் புரட்சித் தலைவி. தனிவாழ்வும் பொதுவாழ்வும் தண்டவாளம் போலப் பிரிந்தும் பிணைந்தும் தோற்றம் காட்டும் இவ்வுலகில் இவற்றைப் பிரித்தறிவது எப்படி?

கொ.ப.செ. என்பது பொதுவாழ்க்கை, மாட்டுக்கறி தனிப்பட்ட வாழ்க்கையா? ஜெயேந்திரனின் துறவறம் பொதுவாழ்க்கை, அன்னாரின் ராசலீலைகள் தனிப்பட்ட வாழ்க்கை என்பது போலவா? எது நற்பெயர்,எது களங்கம்? எது சட்டமன்ற மேசை, எது நக்கீரன்? எது ஜீவாத்மா, எது பரமாத்மா? எது மாயை, எது உண்மை? சோ ராமஸ்வாமி அய்யர்தான் விளக்கமளிக்க வேண்டும்.

● தொரட்டி

# இந்துஸ்தான் யுனிலீவரின் அடக்குமுறைக்கு எதிராக ஒன்றுபட்ட தொழிலாளி வர்க்கத்தின் போர்!

புதுச்சேரி மாநிலம், வடமங்கலத்தில் இயங்கிவரும் பன்னாட்டு ஏகபோக இந்துஸ்தான் யுனிலீவர் நிறுவனத்தின் அடக்குமுறை - பழிவாங்கலுக்கு எதிராக, அந்நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். கடந்த 23.12.2011 அன்று இதர ஆலைத் தொழிலாளர்களை அணிதிரட்டி ஆர்ப்பாட்டத்தை நடத்தியதைத் தொடர்ந்து, புதுச்சேரியிலுள்ள அனைத்து ஆலைத் தொழிலாளர்களிடமும் பொதுமக்களிடமும் தொடரும் போராட்டத்துக்கு ஆதரவு திரட்டும் நோக்கில் கடந்த 12.1.2012 அன்று புதுவை சிங்காரவேலர் சிலை அருகில் பொதுக்கூட்டத்தை நடத்தினர்.

இந்நிறுவனத்தில் செயல்பட்டுவரும் இந்துஸ்தான் லீவர் வெல்ஸ் யூனியனும், பு.ஜ.தொ.மு.வின் இணைப்புச் சங்கமான இந்துஸ்தான் யுனிலீவர் ஒர்க்கர்ஸ் யூனியனும் இணைந்து நடத்திய இப்பொதுக்கூட்டத்திற்கு இந்துஸ்தான் யுனிலீவர் ஒர்க்கர்ஸ் யூனியன் தலைவர் தோழர் அய்யனார் தலைமையேற்க, வெல்ஸ் யூனியன் பொருளாளர் தோழர் விநாயகம், ஒர்க்கர்ஸ் யூனியன் தோழர் லோகநாதன், எல் அண்டு டி பாட்டாளி தொழிற்சங்கத் தலைவர் தோழர் சிவக்குமார், புதுவை பு.ஜ.தொ.மு. பொதுச்செயலர் தோழர் கலை, புதுவை உயர் நீதிமன்ற வழக்குரைஞர் பார்த்தசாரதி ஆகியோர் யுனிலீவர் நிறுவனத்தின் அடக்குமுறை - பழிவாங்கலை எதிர்த்தும், தொடரும் போராட்டத்துக்கு ஆதரவு கோரியும் உரையாற்றினர். ''வருங்காலத் தொழிலாளர் வர்க்கத் தலைவர்களை முதலாளிகள்தான் உருவாக்குகிறார்கள்'' என்று யுனிலீவர் நிறுவனத்தால் பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களை மேடையில் அறிமுகப்படுத்திச் சிறப்புரையாற்றிய பு.ஜ.தொ.மு. மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் சுப.தங்கராசு, மாருதி தொழிலாளர்கள் போல வர்க்க ஒற்றுமையுடன் போராடவும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டமாக முன்னெடுத்துச் செல்லவும் புதுச்சேரி தொழிலாளர்களை அறைகூவினார்.




இக்கூட்டத்தில் போராட்ட உணர்வூட்டிய சென்னை பு.மா.இ.மு. தோழர்களின் புரட்சிகர கலைநிகழ்ச்சி தொழிலாளர்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது. தமது குடும்பத்துடன் இக்கூட்டத்தில் பெருந்திரளாகப் பங்கேற்றுத் தமது வர்க்க ஒற்றுமையை நிரூபித்துக் காட்டிய புதுச்சேரியின் பல்வேறு ஆலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள், அடுத்த கட்டப் போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

–பு.ஜ.செய்தியாளர், புதுவை.



படிப்பகம்

www.padippakam.com




போலீசாரால் அநியாயமாகத் திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்ட சிறுவனை விடுதலை செய்யக்கோரி, போலீசு நிலைய வாயில்களில் தேய்ந்து போன ரப்பர் செருப்புகளைக்

# தேய்ந்துபோன செருப்பும் முதலாளித்துவ சமூக நீதியும்

**ஒரு ஜோடி தேய்ந்து போன ரப்பர் செருப்புகள் காணாமல் போன 'குற்றத்திற்காக'ப் பள்ளிச் சிறுவனை ஈவிரக்கமின்றித் தண்டித்திருக்கிறது, இந்தோனேஷிய நீதிமன்றம்**

இந்தோனேஷிய போலீசின் ஆணவத்திற்கும், நீதித் துறையின் திமிருக்கும் எதிராகத் தேய்ந்துபோன ரப்பர் செருப்புகளை ஆயுதமாக உயர்த்தியிருக்கிறார்கள், அந் நாட்டு மக்கள். குப்பைத் தொட்டிக்குப் போக வேண்டிய தேய்ந்துபோன ரப்பர் செருப்புகள், போலீசு - நீதிமன்றங்களின் மீதான ஏழை மக்களின் வெறுப்பைக் காட்டும் சின்னமாக இந்தோனேஷியா வில் மாறிப் போயிருப்பதன் பின்னே, ஒரு பதினைந்து வயது சிறுவனின் வலியும் வேதனையும் அடங்கியிருக் கிறது.

*14 மாதங்களுக்கு முன்பு, நவம்பர் 2010 - இல், இந் தோனேஷியாவின் மத்திய சுலாவேஸி மாகாணத் தலைநகர் பாலு (Palu) நகரைச் சேர்ந்த ஒரு போலீசு அதிகாரியின் ரப்பர் செருப்புகள் காணாமல் போயின. தனது செருப்பு திருடு போனதாக வழக்குத் தொடுத் தார், அப்போலீசு அதிகாரி. இவ்வழக்கை விசாரித்து வந்த பாலு நகர நீதிமன்றம், போலீசாரால் குற்றவாளி யாக நிறுத்தப்பட்ட ''ஏ.ஏ.எல்.'' (பெயர் மாற்றப்பட் டுள்ளது) என்ற பள்ளிச் சிறுவனைத் திருடன் என்று தீர்ப்பளித்தது. திருடு போனதாகக் கூறப்படுவது நூறு ரூபாய்கூடப் பெறாத பழைய செருப்புதான் என் றாலும், இக்குற்றத்திற்கு நீதிமன்றம் சட்டப்படி விதிக்கக்கூடிய தண்டனை ஐந்தாண்டு சிறைவாச மாகும்.*

இத்திருட்டு வழக்கை போலீசார் புனைந்த விதமும், அதனை நீதிமன்றம் விசாரித்த விதமும் ஒரு புறம் கேலிக்குரியதாகவும் இன்னொருபுறம் அதிகார வர்க்கக் கும்பலின் எதேச்சதிகாரப் போக்கையும் எடுத் துக்காட்டுவதாக அமைந்தது. தனது செருப்பு காணாமல் போனவுடனேயே, அப்போலீசு அதிகாரி திருட்டு வழக்கைத் தொடுக்கவில்லை. செருப்பு காணாமல் போய் ஆறு மாதங்கள் கழித்து, தனது செருப்பைத் திருடியதாக ஒரு பள்ளிச் சிறுவனைத் திடீ ரெனப் பிடித்துக் கொண்ட அப்போலீசு அதிகாரி, அச் சிறுவனை போலீசு நிலையத்திற்கு இழுத்துச் சென்று விசாரணை என்ற பெயரில் மிருகத்தனமாகத் தாக் கினார். அச்சிறுவனின் பெற்றோர் போலீசின் இந்த அத்துமீறலுக்கு எதிராக புகார் கொடுத்தவுடனே, அச் சிறுவனின் மீது போலீசாரால் திருட்டு வழக்கு தொடுக் கப்பட்டது. அதாவது, போலீசார் தங்கள் குற்றத்தை மூடிமறைக்கப் பாதிக்கப்பட்ட சிறுவனையே குற்ற வாளியாக்கினார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த வழக்கு நீதிமன்ற விசாரணைக்கு வந்தவுடனேயே, அச்சிறுவனை விடுதலை செய்யக் கோரி இந்தோனேஷியாவெங்கும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறத் தொடங்கின. பழைய தேய்ந்து போன, அறுந்து போன ரப்பர் செருப்புகளைப் பொதுமக்களிடமிருந்து பெற்று, அவற்றை அந்நாட்டிலுள்ள போலீசு நிலைய வாயில்களிலும், அரசு வழக்குரைஞர்களின் அலுவலக வாயில்களிலும் கொண்டு வந்து கொட்டிப் பொது மக்கள் போராட்டம் நடத்துவது ஓர் இயக்கமாகவே மாறியது. பள்ளி மாணவர்கள் தமது எதிர்ப்பைக் காட்டும் விதமாக, ஷூக்களுக்குப் பதிலாக, அறுந்து போன ரப்பர் செருப்புகளை அணிந்துகொண்டு பள்ளிக்கூடத்திற்குச் சென்றார்கள்.

இத்திருட்டு வழக்கு பாலு நகர நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட பொழுது, சிறுவன் திருடியதாகக் கூறப்பட்ட ரப்பர் செருப்புகள், முக்கிய சாட்சியமாக நீதிபதியின் முன் வைக்கப்பட்டன. ஆனால், செருப்பைப் பறிகொடுத்த போலீசு அதிகாரியோ, நீதிமன்றத்தில் காட்டப்பட்ட செருப்புகள் தனது செருப்புகள் அல்ல என அச்சாட்சியத்தை மறுத்தார். எனினும், பாலு நகர நீதிமன்றம், போதிய சாட்சியம் எதுவுமின்றியும், பொதுக்கருத்தை மீறியும், அச்சிறுவனைத் திருட்டுக் குற்றவாளியென அதிகாரத்திமிரோடு தீர்ப்பளித்தது.

இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகளில் ஊறித் திளைக்கும் போலீசையும், பொதுச் சொத்துக்களைக் கொள்ளையிடும் முதலாளி வர்க்கத்தையும் தண்டிக்க முன்வராத நீதிமன்றம், காணாமல் போன பழைய செருப்புக்காக, ஒரு பள்ளிச் சிறுவனை ஈவிரக்கமின்றித் தண்டித்திருப்பதால், இத்தீர்ப்புக்கு எதிரான கண்டனங்கள் இந்தோனேசியாவெங்கும் வெடித்து வருகின்றன.

இக்கண்டனங்கள் இந்தோனேஷிய அரசமைப்பின் மீது விழுகின்ற செருப்படியைத் தவிர, வேறென்ன!

● திப்பு

# கோயில் சொத்துக்களைக் கொள்ளையிடும் பார்ப்பன - மேல்சாதிக் கும்பல்

''**கோ**யில் சொத்துகளை எல்லாம் நாத்திகம் பேசும் திராவிடக் கட்சியினர் விழுங்கி வருகின்றனர். இந்து தர்மத்தைப் பாதுகாக்க வேண்டுமானால், அறநிலையத் துறையிடம் இருந்து கோயில்களை பிடுங்கி, சுதந்திரமான ஆன்மீக வாதிகள் அடங்கிய வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும்'' என்று இந்து முன்னணி கோரி வருகிறது. மயிலை (சென்னை) கபாலீசுவரர் கோயிலுக்குச் சொந்தமான பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை வாடகையோ, குத்தகையோ கொடுக்காமல் அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்து விரோதிகளின் பட்டியலை அக்கோயிலின் நிர்வாக அதிகாரியான பரஞ்சோதி வெளியிட்டிருக்கிறார். மொத்தம் 473 பேரில் இரண்டு பேர் மட்டுமே முஸ்லிம்கள். ஹிந்துக்கள் 471 பேரில் சில முதலியார்கள், நாடார்கள் தவிர ஆகப் பெரும்பான்மையினர் அய்யர்-அய்யங்கார்களாகவே இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வாடகை கொடுக்காத ப்ராடுகளின் பட்டியலில் முக்கியமானது பாரதிய வித்யா பவன். கதர் அணிந்த காக்கி டவுசர் பேர் வழியும், காந்தி கொலைக்குப் பின்னர் ஆர்.எஸ்.எஸ். மீதான தடையை அகற்றுவதில் முக்கியப் பங்காற்றியவருமான கே.எம்.முன்ஷியால் தொடங்கப்பட்ட நிறுவனம்தான் பாரதிய வித்யா பவன். இதன் முக்கியத் தூண்களில் ஒருவர் ராஜாஜி. கல்வியைப் பரப்புவது என்ற பெயரில் பார்ப்பனியத்தையும், சமஸ்கிருதத்தையும் பரப்பி வரும் இந்த ஆர்.எஸ்.எஸ். பினாமி நிறுவனம் கபாலீசுவரருக்கு வைத்திருக்கும் வாடகை பாக்கி 32 இலட்ச ரூபாய்.

அடுத்தது, மயிலாப்பூர் கிளப். ஜனவரி,1, 1903 அன்று தொடங்கப்பட்ட பெருந்தனக்காரர்களின் தனி உடைமை கிளப்பான இது, 3 அய்யர், 3 அய்யங்கார் மற்றும் ஒரு முதலியாரை உரிமையாளர்களாகக் கொண்டது. தற்போதைய இதன் தலைவர் எம்.ஏ.எம். ராமசாமி செட்டியார். கிரிக்கெட், டென்னிஸ் விளையாட்டுகளுக்கு மேட்டுக்குடிக் குலக்கொழுந்துகளைத் தயார்படுத்தும் பயிற்சித் திடல், உறுப்பினர்களுக்குச் சீட்டாட்டம், டென்னிஸ், டேபிள் டென்னிஸ், ஜிம், வட இந்திய-தென் இந்திய உணவு விடுதிகள் மற்றும் 24 மணி நேர பார் போன்ற வசதிகள், சாஸ்திரி ஹால் என பல கிரவுண்டு கோயில் நிலத்தைக் குத்தகைக்கு வளைத்துப் போட்டிருக்கும் இந்த ஆன்மீக மெய்யன்பர்கள் கபாலிக்கு வைத்திருக்கும் குத்தகை பாக்கி 3.57 கோடி ரூபாய்.

'தேசியத் தலைவர்' எனப் 'பெத்த பேர்' வாங்கிய தெலுங்கு பார்ப்பனரான நாகேஸ்வர ராவினால் ஆரம்பிக்கப்பட்டு, ஊருக்கெல்லாம் தலைவலி தைலம் தரும் அமிருதாஞ்சன் நிறுவனம் கபாலீசுவரருக்கு வைத்திருக்கும் குத்தகைப் பாக்கி ரூ.6 கோடியே 45 இலட்சம்.

கல்விக்கும் ஒழுக்கத்துக்கும் பேர் போனதாக மெச்சிக் கொள்ளப்படுவது பி.எஸ்.



படிப்பகம்

www.padippakam.com

> ''மயிலாப்பூர் கிளப்பையும் பாரதிய வித்யா பவனையும் இடித்துவிட்டு, கபாலீசுவரர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தை மீட்போம்'' என்று ஒருவேளை அறநிலையத்துறை அறிவித்தால், இந்து முன்னணியினர் இரவோடு இரவாக கபாலி கோயிலையே இடித்துவிட்டு, அதைச் 'சர்ச்சைக்குரிய இடம்' ஆக்கி விடுவார்கள்.

ஹைஸ்கூல் என்று அழைக்கப்படும் பெண்ணாத்தூர் சுப்பிரமணிய அய்யர் மேல்நிலைப் பள்ளி. கோயிலுக்குச் சொந்தமான 76 கிரவுண்ட் நிலத்தை 1928-இல் குத்தகைக்கு எடுத்தது. பின்னர் குத்தகை ஒப்பந்தம் 1979-இல் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இன்று ஒரு கிரவுண்ட் நிலத்தின் சந்தை விலை ரூ.5 கோடிக்கும் மேலாகும். பல பிரபல உயரதிகாரிகளை உருவாக்கியதாகப் பீற்றிக்கொள்ளும் இந்தப் பள்ளி, 76 கிரவுண்டுகளுக்கு ஆண்டு குத்தகையாக ரூ. 1250 -ஐ மட்டும் ஒரே ஒருமுறை தந்துவிட்டு, கபாலீசுவரரைக் கோர்ட்டுக்கு இழுத்து வாய்தாவுக்கு அலைய விட்டுக் கொண்டிருக்கிறது.

மயிலாப்பூரில் காமதேனு திரையரங்குக்கு எதிரே கபாலீசுவரருக்குச் சொந்தமான 25 கிரவுண்ட் நிலத்தை ஆக்கிரமித்திருப்பவர் பார்த்தசாரதி அய்யங்கார். இன்று அந்த நிலத்தின் மதிப்பு ரூ.100 கோடிக்கும் மேல். 1901-இல் 99 வருடக் குத்தகையாக எடுத்த அய்யங்கார், இதனை உள்குத்தகைக்கு விட்டு, அது பல கை மாறி இன்று வணிக வளாகங்கள் உள்ளிட்ட கட்டடங்கள் எழுப்பப்பட்டு, 35 பேர்களின் ஆக்கிரமிப்பில் உள்ளது. இப்படியே போகிறது பட்டியல். முதலை வாயில் சிக்கிய இந்தச் சொத்துகளை ஒவ்வொன்றாக மீட்பதற்கு நீதிமன்றத்துக்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள் இந்து அறநிலையத்துறை அதிகாரிகள். பாரம்பரியமிக்க பெரிய மனிதர்களின் கிளப் என்று கூறப்படும் மயிலாப்பூர் கிளப்பின் வாசலில், ''இது கபாலீசுவரர் கோயில் சொத்து'' என்று போர்டு எழுதி வைத்திருக்கிறது இந்து அறநிலையத்துறை. அய்யர், அய்யங்கார்வாள்கள் இதையெல்லாம் பார்த்துக் கூச்சப்பட்டு சொத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுவார்களா என்ன?

அற்ப வாடகை, குத்தகை பாக்கியைக்கூடக் கொடுக்காமல், அறநிலையத்துறையை இவர்கள் கோர்ட்டுக்கு இழுப்பதன் நோக்கமே கோயில் சொத்தை விழுங்குவதுதான். 'வாரியம் அமைத்து விழுங்கவேண்டும்' என்பது இந்து முன்னணியின் கோரிக்கை. விழுங்கியவர்களை வைத்து வாரியம் அமைக்கலாம் என்பது பாரதிய வித்யா பவனின் கருத்து போலும். படுத்திக்கினு போத்திக்கலாம். போத்திக்கினும் படுத்துக்கலாம் என்ற கதைதான்.

சிதம்பரம் நடராசர் கோயில் விசயத்தில் நடந்தது என்ன? கோயில் சொத்துகளை கொள்ளையிடும் தீட்சிதர்களை வெளியேற்றிக் கோயிலை அறநிலையத்துறையிடம் ஒப்படைக்க வைத்தன மனித உரிமைப் பாதுகாப்பு மையமும் மக்கள் கலை இலக்கியக் கழகமும். நடராசன் சொத்துகளை நடராச தீட்சிதர் என்று கையெழுத்துப் போட்டு விற்றிருப்பதற்கான சான்றுகளும், நகைத் திருட்டு தொடர்பாக தீட்சிதர்கள் மீது உள்ள கிரிமினல் வழக்குகளின் விவரங்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் விளைவாக சென்னை உயர் நீதிமன்றம்,கோயிலை அறநிலையத்துறையிடம் ஒப்படைத்துவிட்டது.

தீட்சிதர்களாகிய தங்களில் ஒருவர்தான் நடராசப் பெருமான் என்றும், எனவே கோயிலும் அதன் சொத்துகளும் தங்கள் ஆன்மீக உரிமை என்றும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருக்கிறார்கள் தீட்சிதர்கள். சு.சாமியும் இந்து முன்னணிக் கும்பலும் தீட்சிதர்களுக்கு ஆதரவு. சிதம்பரம் கோயிலுக்கு எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலம், எத்தனை மனைகள், கட்டிடங்கள் இருந்தன, தீட்சி

சென்னை - ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள 25 கோடி ரூபாய் பெறுமான கபாலீசுவரர் ஆலயத்திற்குச் சொந்தமான மனை. 1958 - இல் குத்தகைக்கு விடப்பட்ட இந்த மனையை ஆலய நிர்வாக அதிகாரிகள் பல சட்டப் போராட்டங்களுக்குப் பின் இப்பொழுதுதான் ஆலய நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர்.





படிப்பகம்

www.padippakam.com

தர்கள் தின்றது போக இன்று மிச்சம் என்ன இருக்கிறது, எங்கே இருக்கிறது என்ற உண்மைகளைக் கண்டுபிடிப்பது, ஸ்விஸ் வங்கி கருப்புப் பணத்தைக் கண்டுபிடிப்பதை விடக் கடினமானது.

கோயில், மடங்களின் பேரில் இருந்த சொத்துகளை பார்ப்பன, ஆதிக்க சாதிக் கும்பல் தின்று கொழுத்ததை முடிவுக்குக் கொண்டுவர சர். டி.சதாசிவ அய்யர், பனகல் ராஜா ஆகியவர்கள் முயன்று 1927-ஆம் வருடத்தில் இந்து மத தர்மபரிபாலன சட்டத்தை நிறைவேற்றினார்கள். அச்சட்டப்படி தர்மகர்த்தாக்கள் அடங்கிய வாரியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, கோயில் சொத்துகள் நிர்வகிக்கப்பட்டன. இச்சட்டம் நிறைவேறுவதை சத்தியமூர்த்தி அய்யர் முதல் எம்.கே.டி. ஆச்சாரி வரை அனைத்துப் பார்ப்பனிய சக்திகளும் கடுமையாக எதிர்த்தனர். 1951-இல் அன்றைய தமிழக முதல்வரான ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், இந்து சமய அறநிலையத் துறை எனும் அரசுத்துறையை உருவாக்கும் சட்டத்தைக் கொண்டுவந்தார். அதற்காக அவரை சுதேசமித்திரன் போன்ற பார்ப்பனப் பத்திரிகைகள், 'வெளியே ஒரு கருப்புச்சட்டை ராமசாமி (பெரியார்), உள்ளே ஒரு கதர்ச்சட்டை ராமசாமி' என திட்டித் தீர்த்தன.




பாரம்பரியமிக்க பெரிய மனிதர்களின் கிளப் என அறியப்படும் மயிலாப்பூர் கிளப் நுழைவாயிலில், ''இது கபாலீசுவரர் கோவிலுக்குச் சொந்தமான சொத்து'' என எழுதி வைக்கப்பட்டுள்ள அறிவிப்புப் பலகை, அப்பெரிய மனிதர்களின் யோக்கியதையையும் நாணயத்தையும் பறைசாற்றுகிறது.

''1951-க்கு முன்பு தர்மகர்த்தாக்கள் வேண்டுமென்றே நிலத் தீர்வையையோ அல்லது போர்டாருக்குச் செலுத்தவேண்டிய தொகையையோ செலுத்தாது வைத்து, கோவில் நிலங்களை ஏலத்துக்குக் கொண்டுவந்து தாங்களே தட்டிக்கொண்டு போயிருக்கிறார்கள்.'' என்றும் ''தஞ்சாவூர் ஜில்லாவில் வேதாரண்ய ஈஸ்வரர் தேவஸ்தானத்துக்கு 16,000 ஏக்கர் நிலம் கொண்ட 45 கிராமங்கள் சொந்தமாக இருக்கின்றன. இருந்தும்கூட, இதன் வருஷ வருமானம் இன்று ரூ.75,000 என்றுதான் காட்டப்படுகிறது. வட ஆற்காடு ஜில்லாவில் ஒரு கோவிலின் தர்ம சொத்துக்கள் பூராவுமே ஒரு ஜாகீரின் சொந்த சொத்தாக மாறிவிட்டது. தஞ்சாவூர் ஸ்வர்க்கபுரம் மடத்தில் சுமார் ரூ.15,000 ரொக்கம் கையாடல் செய்யப்பட்டு, 26 ஏக்கர் நிலம் பராதீனம் ஆகியிருக்கிறது. திருச்செங்கோட்டிலும் வேதாரண்யத்திலும் நகைகள் காணாமல் போயுள்ளன'' என்றும் குறிப்பிட்டு, இந்து அறநிலையத் துறையின் தேவையை அன்று ஓமந்தூரார் வலியுறுத்தியுள்ளார்.

இன்று அறநிலையத்துறை இருக்கிறது. சொத்துகள் தான் இல்லை. மிகவும் அரிதாக சில அதிகாரிகள் இப்படிக் களவு போன கோயில் சொத்துகளின் பட்டியலை வெளியிடுகிறார்கள். ஒரு கபாலீசுவரர் கோயில் சொத்து விவகாரம் அரைகுறையாக வெளியே வந்திருக்கும்போதே, கொள்ளையின் மதிப்பு பல ஆயிரம் கோடி ரூபாய் என்று தெரிகிறது. பிரிக்கப்படாத சென்னை மாகாணத்தில் 1951-இல் இருந்த பெரிய மடங்கள் 184. பெரிய கோவில்கள் 12,232. இவற்றிற்கு சுமார் 8 லட்சம் ஏக்கர் நிலங்கள் இருந்தன. பிரிக்கப்பட்ட பின் இவை 6 லட்சம் ஏக்கர்களாகின. அந்த நிலங்கள் மற்றும் சொத்துகள் யாரிடம் இருக்கின்றன என்ற விவரத்தை அறநிலையத்துறை வெளியிட வேண்டும். அந்த சொத்துகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு மக்களின் உடைமையாக்கப்பட வேண்டும். சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் பெருநகரங்களில் விழுங்கப்பட்டுள்ள கோயில் சொத்துக்கள் பல ஆயிரம் ஏக்கர் இருக்கும். அந்தக் கோயில் சொத்துக்களைப் பறிமுதல் செய்து, அவற்றில் வீடற்ற ஏழைகளைக் குடியேற்ற வேண்டும்.

தமது மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை அனைத்தையும் தீர்த்துக் கொள்ளவும், ஊர் சொத்தைக் கொள்ளையடிக்கவும், கடவுளின் பெயரைக் கவசமாகப் பயன்படுத்திய கயவர்களின் வாரிசுதான் இந்து முன்னணி முதலான அமைப்புகள். ''மயிலாப்பூர் கிளப்பையும் பாரதிய வித்யா பவனையும் இடித்துவிட்டு, கபாலீசுவரர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தை மீட்போம்'' என்று ஒருவேளை அறநிலையத்துறை அறிவித்தால், இந்து முன்னணியினர் இரவோடு இரவாக கபாலி கோயிலையே இடித்துவிட்டு, அதைச் 'சர்ச்சைக்குரிய இடம்' ஆக்கி விடுவார்கள். கபாலிக்குக் கோயில் சொந்தம் என்று நிரூபித்த பின்னர்தானே, கோயிலுக்கு கிளப் சொந்தம் என்று பேசவே முடியும்.

● அன்பு



படிப்பகம்

www.padippakam.com

## இரான்:

# அமெரிக்கக் கழுகிடம் சிக்கிய கோழிக்குஞ்சு!

**அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் இரான் மீது கட்டவிழ்த்துவிட்டுள்ள பொருளாதாரத் தடையுத்தரவுகள் ஒரு ஆக்கிரமிப்புப் போருக்கு இணையானதாகும்.**

**லி**பியா மீதான ஆக்கிரமிப்புப் போரை முடித்த கையோடு, இரானைக் குறிவைக்கத் தொடங்கிவிட்டன, அமெரிக்கா தலைமையிலான மேற்குலக ஏகாதிபத்திய நாடுகள். அமெரிக்கா, ஆப்கான் மற்றும் இராக்கின் மீது ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்த சமயத்திலேயே, ‘‘இரான், சிரியா, வட கொரியா ஆகிய மூன்று நாடுகளையும் ரவுடி அரசுகள்’’ எனப் பழித்துப் பேசி வந்தார், அந்நாட்டின் அதிபராக இருந்த ஜார்ஜ் புஷ். குறிப்பாக, இரானின் இசுலாமியக் குடியரசைக் கவிழ்த்துவிட்டு, அங்கு தனது அடிவருடிகளின் ஆட்சியைத் திணிக்க, அமெரிக்கா கடந்த பத்தாண்டுகளாக வெளிப்படையாகவே முயன்று வருகிறது.

இரானில் ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தப் பொருளாதாரத் தடையுத்தரவுகள், எதிர்த்தரப்பினரைத் தூண்டிவிடுதல், இரகசியக் குழுக்களைக் கட்டி அந்நாட்டினுள் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்துதல் எனப் பல்வேறு நாசவேலைகளில் ஈடுபட்டு வரும் அமெரிக்கா, இப்பொழுது அந்நாட்டின் மீது ஓர் அதிரடித் தாக்குதலை நடத்தும் நோக்கத்தோடு, பாரசீக வளைகுடாவில் தனது துருப்புகளைக் குவித்து வருகிறது. இராக்கிலிருந்து தனது கடைசித் துருப்புகளையும் விலக்கிக் கொண்டுவிட்டதாக அறிவித்துள்ள ஒபாமா, அத்துருப்புகளை இரானை அச்சுறுத்தும் நோக்கத்தோடு குவைத்தில் இறக்கிவிட்டுள்ளார். இரானில் இராணுவத் தலையீடு செய்வதை நியாயப்படுத்துவதற்காக, அந்நாடு அணு ஆயுதங்களை இரகசியமாகத் தயாரித்து வருவதாகவும் அது தொடர்பாகப் புதிய ஆதாரங்கள் கிடைத்திருப்பதாகவும் பிரச்சாரம் செய்யத் தொடங்கியுள்ளன, மேற்குலக ஏகாதிபத்திய நாடுகள்.

இரான் இரகசியமாக அணுகுண்டைத் தயாரித்து வருகிறது என்ற தமது புளித்துப்போன குற்றச்சாட்டை நிரூபிக்கவும், இரானை ஓர் பயங்கரவாத நாடென முத்திரை குத்தவும் முயலும் அமெரிக்க ஏகாதிபத்திய கூட்டணி, அதற்காக மிகவும் கேவலமான, கீழ்த்தரமான வேலைகளையும் செய்து வருகிறது. அமெரிக்காவின் இந்த அடாவடித்தனங்களுக்கும் அயோக்கியத்தனங்களுக்கும் வழமை போல சர்வதேச அணுசக்தி முகமையும், ஐ.நா. மன்றமும் அடியாளாகச் செயல்பட்டு வருகின்றன.

சர்வதேச அணுசக்தி முகமை, ‘‘இரான் *2003* - ஆம் ஆண்டுக்கு முன்பாக அணு ஆயுதம் தயாரிப்பது தொடர்பாக நடத்தி வந்த பரிசோதனைகளை இன்னமும் கைவிடாது தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பதாக’’க் குறிப்பிட்டு கடந்த நவம்பர் மாதம் அறிக்கையொன்றை வெளியிட்டதோடு, அதற்காக இரானைக் கண்டித்துத் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியது. மருத்துவ சிகிச்சை உள்ளிட்ட ஆக்கப் பணிகளுக்காகத்தான் அணுசக்தி பரிசோதனையில் ஈடுபட்டு வருவதாக இரான் கூறுவதை ஏற்றுக் கொள்ளாத சர்வதேச அணுசக்தி முகமை, இரான் அணு ஆயுதங்களை இரகசியமாகத் தயாரிக்க முயன்று

இரானை அச்சுறுத்தும் நோக்கத்தோடு பாரசீக வளைகுடாவில் நிறுத்தப்பட்டுள்ள அணு ஆயுதங்களை வீசக்கூடிய அமெரிக்காவின் விமானந்தாங்கிப் போர்க் கப்பல்.





படிப்பகம்

www.padippakam.com



இராக்கிலிருந்து வெளியேறும் அமெரிக்கப் படை இரானை அச்சுறுத்தும் நோக்கத்தோடு குவைத்திலுள்ள முகாம்களுக்கு அனுப்பப்படுகிறது.

வருகிறது என்ற தனது குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக எந்தவொரு புதிய சான்றையும் தனது அறிக்கையிலோ தீர்மானத்திலோ சுட்டிக் காட்டவில்லை. மாறாக, இது பற்றிய ஆதாரங்கள் பின்னர் தரப்படும் என்று பொத்தாம் பொதுவாகத்தான் குறிப்பிட்டுள்ளது.

உண்மையில் சர்வதேச அணுசக்தி முகமையின் இந்தப் புளுகுணி அறிக்கையும் கூட, அதனின் சொந்தசரக்கு கிடையாது. இரானின் அணுசக்திப் பரிசோதனைகள் குறித்து மேற்குலக ஏகாதிபத்திய நாடுகளின் உளவு நிறுவனங்கள் அளித்த விவரங்கள் அடங்கிய ஒரு கணினிக் கோப்பை அடிப்படையாகக் கொண்டுதான் சர்வதேச அணுசக்தி முகமை தனது அறிக்கையைத் தயாரித்துள்ள உண்மையும் இப்பொழுது அம்பலத்திற்கு வந்துவிட்டது. சர்வதேச அணுசக்தி முகமையின் முன்னாள் இயக்குநரும், அமெரிக்காவின் அணுஆயுதத் துறையோடு நெருங்கிய தொடர்பில் இருந்தவருமான ராபர்ட் கெல்லி, இந்த மோசடியை செய்மோர் ஹெர்ஷ் என்ற பத்திரிக்கையாளரிடம் அம்பலப்படுத்தி பேட்டியளித்திருக்கிறார். இதுவொருபுறமிருக்க, சர்வதேச அணுசக்தி முகமை 'தயாரித்த' அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்படும் முன்பே, அது 'கடத்தி'ச் செல்லப்பட்டு, மேற்குலகப் பத்திரிக்கைகளிலும், தொலைக்காட்சிகளிலும் ''பிரேகிங் நியூஸாக'' வெளியிடப்பட்டது.

இப்படி அறிக்கையைத் தயாரித்ததிலும், அது வெளியானதிலும் நடந்த பல உள்ளடி வேலைகளும் சதிகளும் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவந்த போதிலும், அமெரிக்க ஆளும் கும்பலும், மேற்குலக ஊடகங்களும் அது பற்றியெல்லாம் கூச்சப்படவில்லை. குறிப்பாக, இந்த ஆண்டின் இறுதியில் அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெறவிருப்பதால், அமெரிக்காவில் இரானுக்கு எதிரான போர்வெறிக் கூச்சல் நாலாந்திர பாணியில் காதுகூசும் அளவிற்கு நடந்து வருகிறது.

''இரானுடன் ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடும் எந்தவொரு நாடும் அமெரிக்க டாலரைச் செலாவணியாகப் பயன்படுத்தக்கூடாது; யூரோவைச் செலாவணியாகப் பயன்படுத்தினால், பொருளாதாரத் தடையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள பொருட்களை இரானில் இருந்து இறக்குமதி செய்வதற்குப் யூரோவைப் பயன்படுத்தவில்லை என்று இறக்குமதி செய்யும் நாடுகளின் மத்திய வங்கிகள் சான்றளிக்க வேண்டும்'' என மேற்குலக ஏகாதிபத்திய நாடுகள் இரானின் எண்ணெய் ஏற்றுமதி வர்த்தகத்தைச் சீர்குலைக்கும் வண்ணம் பல பொருளாதாரத் தடையுத்தரவுகளை ஏற்கெனவே போட்டுள்ளன. தற்பொழுது, அமெரிக்க அதிபர் ஒபாமா சர்வதேச அணுசக்தி முகமையின் அறிக்கையைக் காட்டி, ''இரானின் மத்திய வங்கியுடன் தொடர்பு வைத்திருக்கும் எந்தவொரு நாடும் அமெரிக்காவின் வங்கிகள், நிதி நிறுவனங்களோடு வணிகத் தொடர்புகளை வைத்துக் கொள்ள முடியாது'' என்ற புதிய பொருளாதாரத் தடையுத்தரவை விதித்திருக்கிறார்.

அமெரிக்காவின் இப்புதிய பொருளாதார தடையுத்தரவு, தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போன்றதாகும். இரானிலிருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து வரும் நாடுகள் அனைத்தும் இரானின் மத்திய வங்கியோடு தொடர்பு வைத்துக்கொள்வது தவிர்க்க முடியாதது. இந்த நாடுகளை மிரட்டிப் பணிய வைப்பதன் மூலம், இரானின் உயிர்நாடியான எண்ணெய் ஏற்றுமதி வர்த்தகத்தை முற்றிலுமாக முடக்கிவிட நரித்தனமாக முயலுகிறது, அமெரிக்கா.

இந்தியா, சீனா, தென் கொரியா, ஜப்பான் ஆகிய ஆசிய நாடுகளும்; இத்தாலி, ஸ்பெயின், கிரீஸ் உள்ளிட்ட சில ஐரோப்பிய யூனியன் நாடுகளும்தான் இரானுடன் கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளுள் முக்கியமானவை. ஐரோப்பிய யூனியன் எதிர்வரும் ஜூலை 1 முதல் இரானிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை முற்றிலுமாகத் தடை செய்யப் போவதாக அறிவித்து, அமெரிக்காவின் மனதைக் குளிரவைத்துவிட்டது. ஜப்பானும் தென் கொரியாவும் அமெரிக்காவின் விருப்பப்படி தங்களின் கச்சா எண்ணெய் இறக்குமதியை இரானிலிருந்து சவூதி அரேபியாவிற்கு மாற்றிக்கொள்ள முடிவு செய்துவிட்டன.

அமெரிக்கா தனது புதிய பொருளாதார தடையுத்தரவை அமல்படுத்துவதற்கு ஆறு மாத கால அவகாசம் அளித்திருக்கிறது. இந்தியா, இந்தச் சலுகையைப் பயன்படுத்திக்கொண்டு, இரானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயைக் குறைக்கப் போவதில்லை



படிப்பகம்

www.padippakam.com

என வீறாப்பாக அறிவித்திருக்கிறது. சீனாவோ அமெரிக்காவின் பொருளாதார தடையுத்தரவை வாயளவில் கண்டித்தாலும், மறுபுறம் இந்த நெருக்கடியைப் பயன்படுத்திக்கொண்டு, தான் இறக்குமதி செய்யும் கச்சா எண்ணெய்க்கு அதிகக் கட்டணச்சலுகை தர வேண்டும் எனப் பேரம் நடத்திக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் இரான் மீது திணித்துள்ள இப்பொருளாதார தடையுத்தரவு, அந்நாட்டின் மீது ஓர் ஆக்கிரமிப்புப் போரைக் கட்டவிழ்த்துவிடுவதற்கு ஒப்பானது. அமெரிக்காதலைமையிலான ஏகாதிபத்தியங்கள் தொடங்கி வைத்துள்ள இம்மறைமுகமான போரை எதிர்கொள்வது என்ற அடிப்படையில், தனது நாட்டின் கடற்பரப்புக்குட்பட்ட ஹொர்முஸ் கால்வாயில் கச்சா எண்ணெய் போக்குவரத்தைத் தடைசெய்வதன் மூலம் அமெரிக்காவிற்குப் பதிலடி கொடுப்போம் என இரான் அறிவித்திருக்கிறது.

அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் இரான் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையுத்தரவுகளைத் தலையாட்டி ஏற்றுக் கொள்ளும் உலக நாடுகளுக்கு, இரானின் இந்தத் தடையை எதிர்ப்பதற்கு எந்தவிதமான தார்மீக உரிமையும் கிடையாது. மேலும், தன்னைவிட மிகப் பெரும் இராணுவ வலிமையும், அணு ஆயுத பலமும் மிக்க அமெரிக்காவின் அச்சுறுத்தலை இப்படிபட்ட அதிரடி நடவடிக்கைகளின் மூலம்தான் இரான் போன்ற ஏழை நாடுகள் எதிர்கொள்ள முடியும்.

மேற்காசிய நாடுகளில் இருந்து கடல் வழியாக ஏற்றுமதி செய்யப்படும் கச்சா எண்ணெயில் நான்கில் மூன்று பங்கு எண்ணெய் ஹொர்முஸ் கால்வாய் வழியாகத்தான் செல்கிறது. ஹொர்முஸ் கால்வாயில் கச்சா எண்ணெய்ப் போக்குவரத்துக்கு ஏற்படும் சிறு இடையூறுகூட, உலக நாடுகள் எங்கும் பாரதூரமான பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும் என முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள்கூட அலறத் தொடங்கியுள்ளனர். இரான் மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதார தடையுத்தரவுகளை விலக்கிக் கொள்வது மட்டும்தான் இப்பிரச்சினைக்கு ஒரே, எளிமையான தீர்வு. ஆனால், அமெரிக்காவோ, இரானை ஆத்திரமூட்டும் நோக்கத்தோடு, பாரசீக வளைகுடாப் பகுதியில் தனது அணு ஆயுதம் தாங்கிய போர்க்கப்பலையும் துருப்புகளையும் கொண்டுவந்து இறக்கி, இந்த நெருக்கடியைத் தீவிரப்படுத்தி வருகிறது.



கார் குண்டு வெடிப்பின் மூலம் கொல்லப்பட்ட இரானின் அணு விஞ்ஞானி முஸ்தபா அகமதி ரோஷன்.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு இரானின் எதிர்த்தரப்பைத் தூண்டிவிட்டு, இரானின் இசுலாமியக் குடியரசுக்கு எதிராக ஒரு வண்ணப் புரட்சியை நடத்த முயன்று தோற்றுப் போன அமெரிக்க ஏகாதிபத்தியம். தற்பொழுது இரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த போரையும், பயங்கரவாதத் தாக்குதல்களையும்தான் நம்பியிருக்கிறது. அமெரிக்கா பாரசீக வளைகுடாவில் தனது துருப்புகளை இறக்கிய அதேவேளையில், இரானைச் சேர்ந்த இளம் அணு விஞ்ஞானியான முஸ்தபா அகமதி ரோஷன் தனது காரில் பயணம் செய்துகொண்டிருந்தபொழுது, அவரது காரில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்து இறந்து போனார். 20 சதவீத அளவிற்கு யுரேனியத்தைச் செறிவூட்டும் முயற்சியில் தான் வெற்றி அடைந்துவிட்டதாக இரான் அறிவித்த இரண்டாவது நாளே இப்படுகொலை நடந்துள்ளது. இரானைச் சேர்ந்த அணுவிஞ்ஞானிகள் இப்படிக் கொல்லப்படுவது இது முதன்முறையல்ல. கடந்த ஐந்து ஆண்டுகளில் ரோஷன் உள்ளிட்டு ஆறு அணு விஞ்ஞானிகள் பயங்கரவாதத் தாக்குதல்கள் மூலம் கொல்லப்பட்டுள்ளனர். பொருளாதாரதடையுத்தரவுகள் மூலம் முடக்கவியலாத இரானின் அணுசக்தி பரிசோதனைகளை, அந்நாட்டின் அணு விஞ்ஞானிகளைக் கொல்வதன் மூலம் சாதிக்கப் பார்க்கிறது, அமெரிக்கா.

இப்படுகொலைகள் ஒருபுறமிருக்க, இரானின் அணுசக்தி பரிசோதனைக் கூடங்கள், இராணுவ - ஏவுகணைத் தளங்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

**சதாம் உசேன் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தயாரித்துக் குவித்து வைத்திருப்பதாகப் பொய்ப் பிரச்சாரம் நடத்தப்பட்டதைப் போலவே, இரான் இன்னும் ஓராண்டிற்குள் அணு ஆயுதங்களைத் தயாரித்துவிடும் திறனைப் பெற்றுவிடும் என்ற பிரச்சாரம் அமெரிக்காவால் நடத்தப்படுகிறது.**



படிப்பகம்

www.padippakam.com



முஸ்தபா அகமதி ரோஷன் உள்ளிட்ட அணு விஞ்ஞானிகள் அமெரிக்கா - இசுரேல் ஆதரவோடு இயங்கும் பயங்கரவாதக் குழுக்களால் கொல்லப்பட்டதைக் கண்டித்து இரான் மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

வைத்திருக்கும் இசுரேலைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு, இன்னும் அணு ஆயுத ஆற்றலைப் பெறாத இரானை அமெரிக்காவும் அதனின் கூட்டாளிகளும் தண்டிக்கத் துடிப்பது அநீதியானது. தம்மிடம் குவிந்து கிடக்கும் அணு ஆயுதங்களை அழிக்கவோ, கைவிடவோ விரும்பாத அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு ஆகிய ஏகாதிபத்திய நாடுகளும், அவற்றின் அடிவருடிகளான இசுரேலும், இந்தியாவும், ''இரான் அணு ஆயுதங்களைத் தயாரிக்க முயலக் கூடாது என உபதேசிப்பதும், அதற்காக அதனைத் தண்டிக்க முயலுவதும்'' கேலிக்கூத்தானது மட்டுமல்ல, அடிப்படையிலேயே நியாயமற்றது.

குறிப்பாக, கடந்த டிசம்பர் மாதம் அமெரிக்காவின் ஆளில்லா விமானமொன்றை இரான் இராணுவம் சுட்டு வீழ்த்தியது. அந்த விமானம் தவறுதலாக இரானின் வான் பரப்புக்குள் சென்றுவிட்டதாகக் கூறி, உண்மையை மூடி மறைக்க முயன்று தோற்றுப் போனது அமெரிக்கா. இரானின் மீது நடத்தப்படும் பயங்கரவாதத் தாக்குதலின் பின்னே இசுரேலின் உளவு நிறுவனமான மொசாத் இருப்பதை லீ ஃபிகாரோ என்ற பிரெஞ்சு நாளிதழ் அம்பலப் படுத்தியுள்ளது.

இப்படி இரான் மீது கடந்த சில ஆண்டுகளாகவே பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தி வரும் அமெரிக்க - இசுரேல் கூட்டணியைத்தான், பயங்கரவாத நாடுகளாக அறிவித்துத் தண்டிக்க வேண்டும். ஆனால், அமெரிக்கவோ சர்வதேச அரங்கில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு, அமெரிக்காவிற்கான சவூதி அரேபியத் தூதரைக் கொல்ல இரான் முயன்றதாகவும், அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கும் இரானுக்கும் தொடர்பிருப்பதாகவும் கட்டுக்கதைகளைப் பரப்பி, இரானைப் பயங்கரவாத நாடென முத்திரை குத்தி விடக் கீழ்த்தரமாக முயன்று வருகிறது.

அணு ஆயுதங்களைத் தயாரிக்க வேண்டும் என்றால், யுரேனியத்தை 90 சதவீத அளவிற்கு செறிவூட்டும் தொழில்நுட்பத் திறனைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால், இரானோ மருத்துவச் சிகிச்சைக்குப் பயன்படும் வகையில் யுரேனியத்தை 20 சதவீதம் அளவிற்கே செறிவூட்டும் திறனைப் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. பூனையை மடியில் கட்டிக்கொண்டு சகுனம் பார்த்த கதையாக, ஏராளமான அணுஆயுதங்களைத் தயாரித்து

இராக் மீது ஆக்கிரமிப்புப் போரைத் தொடுக்கும் முன்பாக, அந்நாட்டைப் பலவீனப்படுத்தும் சதித் திட்டத்தோடு பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டதைப் போலவே, இரான் மீதும் அடுக்கடுக்காகப் பல பொருளாதாரத் தடையுத்தரவுகளைத் திணித்துவருகிறது, அமெரிக்கா. சதாம் உசேன் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தயாரித்துக் குவித்து வைத்திருப்பதாகப் பொய்ப் பிரச்சாரம் நடத்தப்பட்டதைப் போலவே, இரான் இன்னும் ஓராண்டிற்குள் அணு ஆயுதங்களைத் தயாரித்துவிடும் திறனைப் பெற்றுவிடும் என்ற பிரச்சாரம் நடத்தப்படுகிறது. இப்பீதியூட்டும் புளுகுணிப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து நடத்தி, இரானைத் தனிமைப்படுத்தித் தாக்க வேண்டும் என்ற காரணத்திற்காகவே, இரானின் அணு சக்தி பரிசோதனை முயற்சிகள் தொடர்பாக நடைபெற்று வந்த சர்வதேச பேச்சுவார்த்தையைச் சீர்குலைத்தது, அமெரிக்கா. இவையனைத்தும் 1970 - களில் தான் இழந்த சொர்க்கத்தை எப்படியாவது மீண்டும் கைப்பற்றிவிட வேண்டும் என்ற வெறியோடு சாத்தானின் பேரரசு அலைவதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

● செல்வம்

## அறிவிப்பு

**''கறுப்புப் பணம்: கறுப்புக்கும் வெள்ளைக்கும் இடையில்...'' என்ற கட்டுரையின் தொடர்ச்சி தவிர்க்க வியலாத காரணங்களால் இவ்விதழில் இடம் பெற வில்லை; மார்ச் 2012 இதழில் அத்தொடர்ச்சி வெளி வரும்.**

**- ஆசிரியர் குழு.**



படிப்பகம்

www.padippakam.com

## டர்பன் மாநாடு:

# ஆடுகள் மீது பழிபோடும் ஓநாய்கள்

**பசுமைக்குடில் வாயு வெளியேற்றம் குறித்து நடந்த டர்பன் மாநாடு, சுற்றுச்சூழலை நஞ்சாக்கிவரும் ஏகாதிபத்திய நாடுகளையும் அதனால் பாதிக்கப்பட்டுள்ள ஏழை நாடுகளையும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்கிறது.**

தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில் நடந்த அனைத்துலக நாடுகளின் பருவநிலை மாற்றம் குறித்த மாநாடு, ஏகாதிபத்திய வல்லரசுகளின் நோக்கங்களுக்கு ஏற்ப ஒத்தூதிவிட்டு, வெற்று ஆரவாரத்துடன் முடிந்துள்ளது.

அதிகரித்துவரும் புவியின் வெப்பம் மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவற்றினால் விளையும் இயற்கைச் சேதங்களைத் தடுக்க வளி மண்டலத்தில் பசுமைக்குடில் வாயுக்கள் எனப்படும் கரியமில வாயு, மீத்தேன் போன்றவற்றின் அளவைக் குறைக்க வேண்டும். இதற்காக உலக நாடுகள் 1992-ஆம் ஆண்டில் பிரேசில் நாட்டின் தலைநகரான ரியோ டி ஜெனிரோவில் ஐ.நா.மன்றத்தின் சுற்றுச்சூழல் மாநாட்டில் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கின. அதன் பிறகு, ஜப்பானில் உள்ள கியோட்டோ நகரில் நடந்த மாநாட்டுக்குப் பின்னர், இந்த ஒப்பந்தம் கியோட்டோ ஒப்பந்தம் என்ற பெயரில் நடைமுறைக்கு வந்தது.

வெள்ளம், வறட்சி, அதிவேகப் புயல், கடுங்குளிர், நோய்கள் அதிகரித்தல் - எனப் பல கேடுகளும் மனித குலப் பேரழிவுகளும் பெருகுவதற்குப் புவி வெப்பமடைதலே முதன்மைக் காரணமாகும். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா, ஜப்பான் ஆகிய ஏகாதிபத்திய வல்லரசுகளே பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தை அதிகரித்துப் புவி வெப்பமடைதலைத் தீவிரமாக்கும் முதன்மைக் குற்றவாளிகள்.

2012-ஆம் ஆண்டுக்குள் பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தைத் தொழில் வளர்ச்சியடைந்த மேலை நாடுகள் குறிப்பிட்ட அளவுக்குக் குறைக்க வேண்டும்; 2012-க்குள் உலகின் வெப்பநிலையை 5 சதவீத அளவுக்குக் குறைக்க உலக நாடுகள் முன்வர வேண்டும் - என கியோட்டோ ஒப்பந்தத்தின் மூலம் பெயரளவிலான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. கியோட்டோ ஒப்பந்தம் முடிவடைய இருக்கும் பின்னணியில், இதற்கான அடுத்தகட்ட நகர்வை முன்வைக்கும் நோக்கில் டர்பன் மாநாடு கடந்த ஆண்டில் நவம்பர் 28 முதல் டிசம்பர் 11-ஆம் தேதிவரை 13 நாட்கள் நடந்தது. இம்மாநாட்டில் இறுதியாக்கப்பட்ட ''மேம்பட்ட செயல்பாடுகளுக்கான டர்பன் மேடை'' என்று அழைக்கப்படும் ஒப்பந்தம், கியோட்டோ மாநாட்டின் பெயரளவிலான கட்டுப்பாடுகளுக்கும் சமாதி கட்டியுள்ளது.

கியோட்டோ ஒப்பந்தத்தில் ஏகாதிபத்தியங்கள் வெளியேற்றும் பசுமைக்குடில் வாயுப் பெருக்கத்தை ஓரளவு கட்டுப்படுத்தும் விதிகள் அறிவிக்கப்பட்டிருந்தன. அவற்றை நடைமுறைப்படுத்த ஏகாதிபத்தியங்கள் முன்வரவில்லை என்றாலும், இந்த விதிகள் ஏட்டளவிலாவது இருந்து வந்தன. தற்போதைய ஒப்பந்தத்தில் அதுவும் கைவிடப்பட்டுள்ளது. தொழில் வளர்ச்சியடைந்த அமெரிக்காவும், பின்தங்கிய நிலையிலுள்ள ஆப்பிரிக்க கண்டத்தின் ஏழை நாடும் ஒன்றுதான் என்றும், 194 உறுப்பு நாடுகளும் பசுமைவாயு வெளியேற்றம் பற்றிய கட்டுப்பாடுகளை ஏற்க வேண்டும் என்றும் தற்போதைய ஒப்பந்தம் அனைத்து நாடுகளையும் பொதுமைப்படுத்த முயற்சிக்கிறது. இதனால்தான், கியோட்டோ ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்த அமெரிக்கா, டர்பன் மாநாட்டு முடிவுகளை வரவேற்றுள்ளது.

ஏழை நாடுகளும் வளரும் நாடுகளும் பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தவில்லை என்று காரணம் காட்டி, ஏகாதிபத்திய நாடுகள் நாங்களும் கட்டுப்படுத்த மாட்டோம் என்று நியாயவாதம் பேசவும், மொத்தத்தில் எவ்வித வரைமுறையின்றி பசுமைக்குடில் வாயுவை வெளியேற்றிவிட்டு, புவி வெப்பமடைதலுக்கு நாங்கள் மட்டும் பொறுப்பல்ல என்று ஏழை நாடுகளையும் குற்றவாளியாக்கிப் பழியைப்போடும் ஏகாதிபத்தியங்களின் திட்டத்திற்கு ஏற்பவே இந்த மாநாடு நடந்துள்ளது. இதற்காக எல்லா ஏழை நாடுகளையும் ஒருங்கிணைத்து விவாதிக்கச் சொல்லி இம்முடிவை ஏற்க வைக்கும் தரகனாக ஐ.நா.மன்றம் செயல்பட்டுள்ளது.

அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய வல்லரசுகள், அவற்றின் கூட்டாளியாகவும் வட்டார மேலாதிக்க வல்லரசாகவும் உள்ள இந்தியா போன்ற வளரும் நாடுகள், தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள ஏழை நாடுகள் - எனப் பொதுவில் உலக நாடுகள் மூன்று வகையாக உள்ளன. இந்தியா, சீனா, பிரேசில், தென்கொரியா முதலான நாடுகள் ஒப்பீட்டு ரீதியில் ஏழை நாடுகளை விடத் தொழில் வளர்ச்சி பெற்றுள்ள நாடுகள். ஏகாதிபத்திய நாடுகளைப் போலவே இந்நாடுகளிலும் பசுமைக்குடில் வாயு வெளியேற்றம் அதிகரித்து வருகிறது.

ஏகாதிபத்திய நாடுகளின் தேவைக்காகவும் நுகர்வுக்காகவும் இத்தகைய நாடுகளில் 'தொழில் வளர்ச்சி'



படிப்பகம்

www.padippakam.com

என்ற பெயரில் ஏற்றுமதி அடிப்படையிலான தொழில்கள் தொடங்கப் படுகின்றன. ஏகாதிபத்திய நாடுகளோ சுற்றுச்சூழலை நஞ்சாக்கும் முதலாளித்து இலாபவெறி கொண்ட உற்பத்தியைக் கொண் டவை. அதே பாதையைப் பின்பற்றும் இந்நாடுகள், இதனை 'வளர்ச்சிக்கான பாதை' என்கின்றன. 'வளர்ச்சி' என்ற பெயரில் இயற்கையை நாசமாக்கிப் பேரழிவுகளை விளை வித்து வரும் முதலாளித் துவ உற்பத்திமுறையை இந்தியா போன்ற வளரும் நாடுகள் எதிர்ப்பது மில்லை. ஏகாதிபத்தி யங்கள் மீது கட்டுப்பாடு களை விதிக்க உருப்படியாக எந்த முயற்சியும் எடுப்பது மில்லை.




மனித குலத்தைப் பேரழிவில் தள்ளும் ஏகாதிபத்தியங்களின் நோக்கத்துக்கு ஏற்ப நடந்த பருவநிலை மாற்றம் குறித்த டர்பன் மாநாடு.

இந்தியா போன்ற ஒப்பீட்டு ரீதியில் தொழில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளின் ஆளும் வர்க்கமான தரகுப் பெருமுதலாளிகள் ஏகாதிபத்தியங்களுடன் கூட்டுச் சேர்ந்து ஆதாயமடைவதோடு, விரிவடை யவும் முயற்சிக்கின்றனர். மறுபுறம், பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தக் கூடுதலாகச் செலவிட வேண்டும் என்பதால், அவற்றைச் செயல் படுத்த மறுக்கின்றனர். தரகுப் பெருமுதலாளிகளின் வர்க்க நலன்தான் இந்திய அரசின் நலனாக உள்ளது. இதற்கேற்ப மற்ற ஏழை நாடுகளைத் தம் பின்னே திரட்டிக் கொண்டும் தம் மீது கட்டுப்பாடுகளை விதிப் பதை இந்தியா எதிர்க்கிறது. இதற்காகவே வெற்று ஏகா திபத்திய எதிர்ப்புச் சவடாலடிக்கிறது.

''எங்கள் நாட்டின் கோடிக்கணக்கான மக்களின் வாழ்வைப் பணயம் வைக்கச் சொல்கிறீர்களா? எங் களைப் பிணைக்கைதியாக்காதீர்கள்'' என்று டர்பன் மாநாட்டில் இந்தியச் சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெயந்தி நடராசன் ஆவேசமாகப் பேசியதாக ஊட கங்கள் பரபரப்பாக செய்தி வெளியிட்டன. இப்படி யெல்லாம் சவடால் அடித்த அவர், ஏழை நாடு களுக்கும் பணக்கார நாடுகளுக்குமிடையிலான வேறு பாட்டை மறைத்துச் சுற்றுச்சூழல் தொடர்பாக மேற் கொள்ளும் நடவடிக்கைகளுக்கான பொறுப்பு அனைத்து நாடுகளுக்கும் சமமானதே என்றார். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் திட்டத்தை ஏற்க மறுப்பது போல முறுக்கிக் கொண்ட அவர், பின்னர் எப்படியாவது மாநாட்டை வெற்றிபெறச் செய்ய சம ரசம் காண்பது என்ற பெயரில், ஏகாதிபத்தியங்கள் முன் வைத்த துரோகத் திட்டத்தை இந்திய ஆளும் வர்க்கங் களின் நலனுக்கேற்ப ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஏழை நாடுகள் அல்லது ஒப்பீட்டு ரீதியில் தொழில் வளர்ச்சி அடைந்துள்ள நாடுகள் முதலானவற்றில் முதலீடு செய்து ஆலைகளைத் தொடங்கி அவற்றுக்குச் சொந்தம் கொண்டாடும் ஏகாதிபத்தியங்கள், அந்த ஆலைகள் வெளியேற்றும் நச்சுக் கழிவுகளுக்குப் பொறுப்பேற்பதில்லை. இதற்கு ஆலை அமைந்துள்ள நாடும் மக்களும்தான் பொறுப்பேற்க வேண்டும் என் கின்றன. இந்த அநீதியை எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக, ஏகாதிபத்தியங்களின் கூட்டுக் களவாணி களாக உள்ள இந்தியா, சீனா, பிரேசில் முதலான நாடுகள் ஒருபுறம் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதாகச் சவடால் அடித்துக்கொண்டும், மறுபுறம் ஏகாதிபத் தியங்களின் திட்டங்களுக்கு ஏற்பச் சமரசமாகச் சென்று துரோகமிழைத்தும் வருகின்றன. இந்த உண்மையை டர்பன் மாநாடு மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

சுற்றுச்சூழலும் உயிரியல் சூழலும் நஞ்சாவதற்கு இலாபவெறியும் போர்வெறியும் கொண்ட ஏகாதிபத் திய உற்பத்திமுறை எனும் பேரழிவுப்பாதையே முதன்மைக் காரணம். சுற்றுச்சூழலை நஞ்சாக்கிவரும் முதன்மைக் குற்றவாளிகளான ஏகாதிபத்தியங்களை மட்டுமின்றி, அவற்றின் கூட்டுக் களவாணிகளாக உள்ள இந்தியா போன்ற வளரும் நாடுகளின் துரோ கத்தையும் அம்பலப்படுத்தி முறியடிக்க, அனைத்துலக மக்களும் அணிதிரண்டு போராடுவதே இன்றைய முக்கிய கடமையாகியுள்ளது. ஏகாதிபத்திய உற்பத்தி முறைக்கு எதிரான, மக்கள் நலனையும் சுயசார்பையும் அடிப்படையாகக் கொண்ட தேசிய உற்பத்தி முறையை நிறுவி வளர்க்காத வரை, ஏழை நாடுகள் மீது ஏகாதிபத்தியங்கள் போடும் பழியையும், சுற்றுச்சூழல் பாதிப்பின் கோரமான விளைவுகளையும் தடுத்து நிறுத்தவே முடியாது.

● முத்து



படிப்பகம்

www.padippakam.com

## உலகளாவிய நிதி நெருக்கடியின் ஐந்து கட்டங்கள் (2007-2011)

# தீராத தலைவலி!

**உலகப் பொருளாதார நெருக்கடி மேலும் முற்றுவதற்கான அறிகுறிகள்தான் தென்படுகிறதேயொழிய, தீர்வதற்கான வழிகளும் வாய்ப்புகளும் காணப்படவில்லை.**

**2007-ஆம் ஆண்டில் சப்-பிரைம் அடமானக் கடன் நெருக்கடியாக முதலில் அமெரிக்காவில் தொடங்கிய நெருக்கடி, பின்னர் உலகப் பொருளாதாரத்தைக் கடுமையாகத் தாக்கிய பெரும் பின்னடைவாக வளர்ந்தது. பின்னர் இதுவே உலகு தழுவிய பொருளாதார நெருக்கடியாகப் பரிணமித்து, முதலாளித்துவ கட்டமைப்புக்கே ஏற்பட்ட நெருக்கடியாகத் தீவிரமடைந்துள்ளது.**

***2011, ஆகஸ்ட் 7-ஆம் தேதியிட்ட ''கார்டியன்'' இதழில், அவ்விதழின் பொருளாதார ஆசிரியரான லேரி எலியட் எழுதிய கட்டுரை, கடந்த 2007-ஆம் ஆண்டிலிருந்து ஐந்து கட்டங்களில் இந்நெருக்கடி முற்றி வந்துள்ளதைப் பற்றிய சித்திரத்தைத் தொகுப்பாக வழங்குகிறது. இக்கட்டுரையின் மொழியாக்கம், நெருக்கடியின் பரிமாணத்தை வாசகர்கள் புரிந்து கொள்ள உதவும்.***

2007-ஆம் ஆண்டின் சப் பிரைம் அடமானக் கடன் குமிழி (திருப்பிக் கட்ட உத்தரவாதமில்லாத கடன்கள் மீது நடத்தப்பட்ட கண்மூடித்தனமான ஊகபேர சூதாட்டம்) வெடித்ததிலிருந்து இப்போது அமெரிக்காவின் கடன் அந்தஸ்தை கீழிறக்கியுள்ளது வரையிலான நெருக்கடிகள் இத்துடன் முடியப் போவதில்லை.

2007, ஆகஸ்டு 9; 2008, செப்டம்பர் 15; 2009, ஏப்ரல் 2; 2010, மே 9; 2011, ஆகஸ்ட் 5 — அமெரிக்காவின் சப் பிரைம் அடமானக் கடன் குமிழி வெடித்ததிலிருந்து தற்போதைய வீழ்ச்சி வரை, மிகவும் கடுமையான நெருக்கடிகளாக ஐந்து கட்டங்களில் இந்நெருக்கடி முற்றி உலகப் பொருளாதாரத்தைக் கடுமையாகத் தாக்கியுள்ளது. முதலாளித்துவத்தின் பெருமந்தக் (Great Depression) காலத்திற்குப் பிறகு, உலகப் பொருளாதாரம் கடும் நெருக்கடியில் சிக்கிய நிலைமையை மேற்கூறிய நாட்களில் நாம் பார்க்க முடியும்.

2007, ஆகஸ்டு 9 - இல் தொடங்கிய முதற்கட்டம், வங்கித்துறை நெருக்கடியில் தொடங்கியது. பிஎன்பி பரிபாஸ் என்ற பிரான்சு நாட்டு வங்கி, தன்னுடைய இருப்பில் பணம் இல்லாததால், அமெரிக்காவின் அடகுக் கடன் துறையில் செயல்படும் 3 பிரபல வேலியிடப்பட்ட நிதியங்களில் (Hedge Funds) தனது செயல்பாடுகளை முடக்கி வைப்பதாக அறிவித்தது. பல இலட்சம் கோடி டாலர் மதிப்புள்ளவை என்று கருதப்பட்ட ஏராளமான பந்தய ஒப்பந்தங்களின் (Derivatives) மதிப்பு, தாங்கள் எண்ணிக் கொண்டிருந்ததைக் காட்டிலும் மிகவும் குறைவானதே என்ற உண்மை பல வங்கித்துறையினருக்கு இந்தத் தருணத்தில்தான் தெரிய வந்தது.

எனினும், இதனால் ஏற்பட்ட பேரிழப்பு எவ்வளவு என்றோ, எந்தெந்த வங்கிகளுடைய பணம் இத்தகைய குப்பைப் பத்திரங்களில் சிக்கியிருக்கிறது என்றோ யாராலும் கணிக்க இயலவில்லை. இதன் காரணமாக, வங்கிகளுக்கு இடையிலான பரஸ்பர நம்பிக்கை ஒரே நாளில் தகர்ந்தது. வங்கிகள் தமக்கிடையிலான வர்த்தகத்தை நிறுத்திக் கொண்டன.

நிதி நெருக்கடி மேலும் முற்றி வெடிப்பதற்கு ஓராண்டு காலம் பிடித்தது. 2008, செப்டம்பர் 15 அன்று முதலீட்டு வங்கியான லேமேன் பிரதர்ஸைத் திவாலாகிப் போவதற்கு அமெரிக்க அரசு அனுமதித்த அன்று அது வெடித்தது. எந்தவொரு வங்கியும் கடுமையான நெருக்கடியில் சிக்கிக் கொண்டால், உடனே அரசாங்கங்கள் அவற்றின் இழப்புகளை ஈடுசெய்து கைதூக்கி விடும் (பெயில் அவுட்) என்று ஒரு நம்பிக்கை பொதுவில் நிலவி வந்தது. திவாலாகும் நிலையில் இருந்த அமெரிக்காவின் மிகப் பெரிய முதலீட்டு வங்கியான பியர் ஸ்டீர்ன்ஸ்-ஐ இன்னொரு தனியார் வங்கி வாங்கிக் கொள்வதற்கான ஏற்பாட்டை, அமெரிக்காவின் மத்திய அரசு வங்கியான பெடரல் ரிசர்வ் செய்தது. இதேபோல, சப்-பிரைம் கடன் அடமான நெருக்கடியில் சிக்கிய நார்த்தன் ராக் வங்கியை பிரிட்டிஷ் அரசு நாட்டுடமையாக்கியது.

வங்கிகள் எனப்படுபவை ''மூழ்கவே முடியாத அளவுக்கு மிகப் பெரியவை'' (too big to fail) என்ற நம்பிக்கையும் லேமன் பிரதர்ஸ் திவாலானவுடனேயே பொய்யாகிவிட்டது. சீட்டுக்கட்டுச் சரிவது போல உலக நிதி அமைப்பே தடதடவெனச் சரிந்து விடக் கூடிய அபாயத்தின் காரணமாக, மேற்கத்திய அரசாங்கங்கள் கோடிக்கணக்கான டாலரைக் கொட்டி, தங்களது நாட்டின் வங்கிகள் நொறுங்கி விழுவதைத் தடுத்தன. உயிர் போகும் தருணத்தில் வங்கிகள் கைதூக்கி விடப்பட்டு விட்டன. என்றபோதிலும்,



படிப்பகம்

www.padippakam.com

அதற்குள்ளாகவே உலகப் பொருளாதாரம் சரியத் தொடங்கிவிட்டது.

நுகர்வோரின் நம்பிக்கையும் வர்த்தக உலகின் நம்பிக்கையும் சரிந்து கொண்டிருந்த அதேநேரத்தில், தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த வங்கிக் கடன்கள் நின்று போயின. பரவ இருக்கும் நிதி நெருக்கடியைக் கணக்கில் கொண்டு மத்திய வங்கிகள் வட்டி விகிதங்களைக் குறைக்க முடியவில்லை; ஏனென்றால், இந்த நெருக்கடிகள் வருவதற்கு முன்னர்தான், எண்ணெய் விலை உயர்வின் காரணமாகப் பணவீக்கம் பரவாமல் தடுக்கும் பொருட்டு, மத்திய வங்கிகள் அனைத்தும் வட்டி விகிதங்களை உயர்த்தியிருந்தன.

வளர்ச்சியடைந்த நாடுகளும் வளரும் நாடுகளும் கூட்டுச் சேர்ந்து புதிதாக உருவாக்கியுள்ள ஜி-20 என்ற அமைப்பு, இந்தப் பொருளாதாரப் பின்னடைவு (recession) பெருவீழ்ச்சியாக மாறுவதைத் தடுக்கும் பொருட்டு, 2008 - 09 -ஆம் ஆண்டின் குளிர்காலத்தில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டது. வட்டி விகிதங்கள் தரைமட்டத்துக்குக் குறைக்கப்பட்டன. அரசின் செலவுகள் அதிகரிக்கப்பட்டு, சிறிதும் பெரிதுமான ஊக்கப் பொதிகள் அறிவிக்கப்பட்டன. நோட்டு அடித்துப் புழக்கத்தில்விடாமல், இணையத்தின் மூலம் மின்னணுப் பணத்தின் புழக்கம் கூட்டப்பட்டது.

2009 - ஆம் ஆண்டு ஏப்ரல் 2 - ஆம் நாளன்று இலண்டனில் நடந்த ஜி-20 அமைப்பின் மாநாட்டில், 5 இலட்சம் கோடி டாலர் அளவுக்கு அரசுச் செலவின அதிகரிப்பு மற்றும் வரிக்குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும், அனைத்துலக நாணய நிதியம் (ஐ.எம்.எப்.) மற்றும் பிற அனைத்துலக நிதி அமைப்புகளுக்கும் 110 ஆயிரம் கோடி டாலர் கொடுத்து, வேலைவாய்ப்பையும் வளர்ச்சியையும் பெருக்குவதென்றும், வங்கிகளைச் சீர்திருத்துவதென்றும் இந்த நாடுகளின் தலைவர்கள் உறுதியேற்றனர். இந்தத் திசையில் ஒரு அடி எடுத்து வைப்பதற்கு முன்பாகவே, சர்வதேச ஒத்துழைப்பு சீர்குலையத் தொடங்கியது. நாடுகள் தத்தம் சொந்தத் திட்டத்தை அமல்படுத்தத் தொடங்கி விட்டன.

2010, மே 9 - ஆம் நாள் அன்று உலகத்தின் கவனமும் கவலையும் தனியார் துறையிலிருந்து அரசுத் துறையை நோக்கித் திரும்பின. சர்வதேச நாணய நிதியமும் ஐரோப்பிய ஒன்றியமும் கிரீஸ் நாட்டுக்கு நிதியுதவி செய்யப் போவதாக அறிவித்தன. வங்கிகள் திவாலாகாமல் தடுப்பது என்பதிலிருந்து, அரசாங்கங்கள் திவாலாகாமல் தடுப்பது என்பதாகப் பிரச்சினை மாறியது. வரி வருவாய் குறைவு மற்றும் மக்கள் நலத் திட்டச் செலவு அதிகரிப்பு ஆகிய காரணங்களால் மட்டுமின்றி, 2008-09 குளிர்காலத்தில் அறிவிக்கப்பட்ட நிதித்துறை சலுகைகள் காரணமாகவும் பொருளாதாரப் பின்னடைவுக் காலத்திலான கிரீஸ் நாட்டின் பட்ஜெட் பற்றாக்குறை ஊதிப் பெருத்தது.

தனது நிதி நெருக்கடியை மூடி மறைத்ததன் காரணமாகவும், வரி வசூல் செய்ய முடியாத சிக்கல்களாலும் கிரீஸ் நாட்டு அரசு விசேடமான பிரச்சினைகளை எதிர்கொண்டது. மற்ற நாடுகளோ தங்கள் நாட்டின் பட்ஜெட் பற்றாக்குறை அதிகரித்துக் கொண்டே செல்வதைக் கண்டு பீதியடைந்தன. சிக்கன சீரமைப்பு என்பது புதிய முழக்கமாகியது. இது பிரிட்டன், ஐரோப்பிய வட்டார நாடுகளை மட்டுமின்றி, வெகு நீண்டகாலமாக பட்ஜெட் பற்றாக்குறை என்பதையே தனது கொள்கையாகக் கொண்டிருந்த அமெரிக்காவின் கொள்கை முடிவுகள் மீதும் இந்தச் சிக்கன சீரமைப்புக் கொள்கை தாக்கம் செலுத்தத் தொடங்கியது.

தனியார் (முதலாளித்துவத்தின்) கடன் நெருக்கடி ஒரு நாட்டின் கடன் நெருக்கடியாக உருமாறும் நிகழ்ச்சிப் போக்கு கடந்த 2011, ஆகஸ்ட் 5 - வெள்ளிக்கிழமையன்று முழுமையடைந்தது. வார இறுதி நாளன்று, வால் ஸ்டிரீட்டின் வர்த்தக நிறுவனங்கள் கடையை மூடும் வரைக் காத்திருந்த ஸ்டாண்டர்டு அண்டு புவர் (Standard and Poor) என்ற தர மதிப்பீட்டு நிறுவனம், அமெரிக்காவின் கடனைத் திருப்பிக் கொடுக்கும் ஆற்றலை, ''ஏஏஏ'' என்ற மிக உயர்

முதலாளித்துவ சமூக - பொருளாதாரக் கட்டமைப்பு படுதோல்வியடைந்துவிட்டதைக் குறிக்கும் அமெரிக்காவில் நடந்த வால் ஸ்ட்ரீட் போராட்டம். (கோப்புப் படம்)






படிப்பகம்

www.padippakam.com

தரத்தில் இனிமேலும் வைக்க இயலாது என்று அறிவித்தது.

இந்த அறிவப்பு வெளி வந்த தருணம் மிக மோச மானது. 2008-இன் இறுதிக் காலத்துக்குப் பின், கடந்த வாரம்தான் பங்குச் சந்தை மிகப் பெரிய வீழ்ச்சியைச் சந்தித்தது என்பது மட்டும் இதற்குக் காரணமல்ல. மென்மேலும் மந்தத்தில் வீழ்ந்து வரும் உலகப் பொருளாதாரத்தையும், அதன் ஓர் அங்கமான ஐரோப்பாவில் கட்டமைப்பு நெருக்கடியையும் எதிர்கொண்டிருக்கிறார்கள் கொள்கை வகுப்பாளர்கள். முட்டாள்தனத்தில் அவர்களுக்கிடையில் காணப்படும் ஒற்றுமைதான், அவர்களுக்கிடையில் காணப்படும் கருத்தொற்றுமை. சிக்கன சீரமைப்பு என்ற அவர்களது கொள்கை, நிலைமையை மேம்படுத்தப் போவதில்லை, மோசமாக்கப் போகிறது. 2007-ஆம் ஆண்டு வெடித்த பொருளாதார நெருக்கடிக்குக் காரணமான பிரச்சினையையே அவர்கள் இன்னும் தீர்த்தபாடில்லை. சீனா, ஜெர்மனி போன்ற கடன் அளிக்கும் நாடுகளுக்கும் அமெரிக்கா போன்ற மிகப் பெரிய கடனாளி நாடுகளுக்குமிடையிலான ஏற்றத்தாழ்வு என்ற அந்தப் பிரச்சினைக்கு இதுவரை அவர்களால் எந்தத் தீர்வும் காண முடியவில்லை.

**மென்மேலும் மந்தத்தில் வீழ்ந்து வரும் உலகப் பொருளாதாரத்தை எதிர்கொண்டிருக்கிறார்கள் கொள்கை வகுப்பாளர்கள். முட்டாள்தனத்தில் அவர்களுக்கிடையில் காணப்படும் ஒற்றுமைதான், அவர்களுக்கிடையில் காணப்படும் கருத்தொற்றுமை. சிக்கன சீரமைப்பு என்ற அவர்களது கொள்கை, நிலைமையை மேம்படுத்தப் போவதில்லை, மோசமாக்கப் போகிறது.**

இத்தகைய சூழலில், வரவிருக்கும் நிலைமைகள் குறித்துத் தடாலடியாக நம்பிக்கையூட்டும் விதத்தில் பேச முடியாது. சந்தைகள் பெரிதும் ஆட்டம் கண்டவாறுதான் இருக்கும். அமெரிக்காவின் கடனைத் திருப்பிக் கொடுக்கும் ஆற்றல் குறைந்து விட்டதாக ஸ்டாண்டர்டு அண்டு புவர் நிறுவனம் மதிப்பிட்டிருப்பதால், அமெரிக்கக் கடன் பத்திரங்கள் அளிக்கும் வருவாய் உயராது. ஜப்பானும் ''ஏஏஏ'' தரத்தை நீண்ட காலத்துக்கு முன்பே இழந்து விட்டது. அதன் மொத்த தேசியக் கடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும்போது 200 சதவீத அளவையும் தாண்டிவிட்டது. அதன் கடன் பத்திரங்களின் மதிப்பு இன்னமும் அதளபாதாள நிலையில்தான் உள்ளது. காரணம், ஜப்பானியப் பொருளாதாரம் வளர்வதற்கான சாத்தியங்கள் மங்கலாகவே உள்ளன.

அமெரிக்காவின் நிலைமையும் அதுதான். இப்போதைக்கு உலகின் மிகப்பெரிய பொருளாதாரம் என்று கருதப்படும் அதன் கடன் பத்திரங்கள் அளிக்கும் வருவாயும் குறைவாகத்தான் இருக்கும். ஸ்டாண்டர்டு அண்டு புவர் நிறுவனத்தின் அறிவிப்பு வெளிவந்தவுடன், அமெரிக்காவுக்கு பெய்ஜிங் (சீனா) விட்ட டோஸ் சாதாரணமானதல்ல.

சீனாவின் 10 சதவீத ஆண்டு வளர்ச்சி என்பதன் பொருள், அமெரிக்காவை சீனா முந்தப் போகும் தருணம் நெருங்கிக் கொண்டேயிருக்கிறது என்பதுதான். சீனா விஞ்சும் என்பதையும், இந்த நிலைமையானது இரு நாடுகளுக்குமிடையிலான நெருக்கமான போட்டியாகத் தொடர்ந்து நீடிக்கும் என்பதையும் காட்டுகிறது. தங்களது பொருளாதாரத்தை எப்படி நிர்வகிக்க வேண்டும் என்று மேற்குலக முதலாளி வர்க்கத்துக்குச் சொல்லிக் கொடுக்கும் அளவுக்கு கீழை உலகத்தின் கம்யூனிஸ்டுகளுக்கு தைரியம் வந்துவிட்டது. நிதிச் சந்தைகள் இந்த வாரத்தை எப்படி வேண்டுமானாலும் மதிப்பிடட்டும். 2011, ஆகஸ்ட் 5-ஆம் தேதி என்பது, அமெரிக்கா தனது மேலாதிக்கத்தை இழந்த நாள் என்றே இனி நினைவில் கொள்ளப்படும்.

பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற பெயரில் உயர் கல்விக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டதை எதிர்த்து இங்கிலாந்தில் கல்லூரி - பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)






படிப்பகம்

www.padippakam.com



சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் உழைக்கும் மக்களின் மீது விதிக்கப்பட்ட கூடுதலான வரிகள், நலத் திட்டங்கள் - மானிய வெட்டு ஆகிய பொருளாதாரத் தாக்குதல்களை எதிர்த்து கிரீஸ் நாட்டில் நடைபெற்ற மக்கள்திரள் எழுச்சி. (கோப்புப் படம்)

அதிபர் ஒபாமாவுக்கு இவையனைத்தும் பயங்கரமான செய்திகள். பொருளாதார மீட்சியை அவரால் சாதிக்க முடியவில்லை. அதிகரித்து வரும் ஏற்றத்தாழ்வுகளிலும், கடனுக்காக ஜப்தி செய்யப்பட்ட வீடுகளிலும் அமெரிக்கா மூழ்கிக் கொண்டிருக்கிறது. இன்றுள்ளதைப் போல வேலையின்மை மிக அதிகமாயிருக்கும் ஒரு சூழலில் ரூஸ்வெல்ட்டுக்குப் பிறகு வேறு எந்த அதிபரும் தேர்தலில் வெற்றி பெற்றதில்லை. வரிச் சலுகைகள் முடியப் போகின்றன. அடுத்துவரும் மாதங்களில் நிதிக் கொள்கை மேலும் கடுமையாகப் போகிறது. பொருளாதாரத்தை முடுக்கிவிடுவதற்கு நோட்டு அடிப்பது என்ற மொண்ணையான ஆயுதம் ஒன்றுதான் அமெரிக்காவின் மத்திய வங்கியான பெடரல் ரிசர்வ் வசம் உள்ளது. அதற்கு முன் சந்தைகள் கொஞ்சம் இளகவேண்டும். அதற்குச் சில மாதங்கள் ஆகும். அதன் பின்னர்தான், இந்த மொண்ணையான ஆயுதத்தைக்கூடப் பயன்படுத்த முடியும்.

இதற்கும் மேல் வேறொன்று இருக்கிறது. கடனைத் திருப்பிக் கொடுக்கும் நம்பகத்தன்மை குறைந்து போன அமெரிக்கா என்கின்ற தேசிய அவமானத்துக்குத் தலைமை தாங்கிய அதிபராக ஒபாமா நினைவு கூரப்படுவார். அவர் ஜிம்மி கார்ட்டரைப் போலத் தோன்றுகிறார், ரூஸ்வெல்ட்டைப் போல அல்ல.

இந்த நிலைமைகளைக் கண்டு ஐரோப்பியர்கள் முறுவலிக்க முடியாது. ஏனென்றால், நாம் பார்த்துக் கொண்டிருப்பது அமெரிக்காவின் வீழ்ச்சியை மட்டுமல்ல; ஒட்டு மொத்த மேற்குலகின் வீழ்ச்சியைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சென்ற வாரத்தின் பெரும் சரிவைத் தொடர்ந்து, ஜி-7 நாடுகளுக்கிடையே - அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, பிரான்சு, கனடா, ஜப்பான் - பேச்சுவார்த்தை தொடங்க விருப்பதாக அறிவிக்கப்பட்டது. 20 ஆண்டுகளுக்கு முன்பு வேண்டுமானால், இவர்களுக்கிடையிலான கூட்டத்தால் பயனிருந்திருக்கலாம். சந்தையின் மீது செல்வாக்கு செலுத்தி அமைதிப்படுத்தும் ஆற்றல் இன்று இவர்களுக்கு இல்லை. இன்று சீனாவைத் தவிர்த்து விட்டு, இந்த ஜி-7 நாடுகள் மட்டும் கூடிப் பேசுவது என்பது, 1930-களின் சர்வாதிகாரத்தை அமெரிக்காவைத் தவிர்த்த பிற ''லீக் ஆஃப் நேஷன்ஸ்'' நாடுகள் மட்டும் சேர்ந்து முறியடித்திருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கு ஒப்பானது.

இந்தக் கதைக்கு சுபமான முடிவு ஏதுமில்லை. குமிழிப் பொருளாதார காலத்தில் மட்டுமீறி வாங்கிக் குவித்த கடனைத் தனிநபர்கள் முதல் வங்கிகள் வரை அனைவரும் திருப்பி அடைத்தல், அதிகபட்ச வேலையில்லாத் திண்டாட்டம், நீண்ட காலத்திற்கு மிகவும் பலவீனமான பொருளாதார வளர்ச்சி - மிக அதிகபட்சமாக நேர்மறையில் நடக்கக் கூடியது இவ்வளவுதான். எதிர்மறையில் அதிகபட்சமாக நடக்கக் கூடியது என்ன? அமெரிக்கப் பொருளாதாரம் மீண்டும் பின்னோக்கிச் செல்ல, உலகப் பொருளாதாரமும் மீண்டும் தேக்கத்தில் விழும். ஐரோப்பிய ஒன்றியமே பிய்ந்து சிதைந்து போகும். இரண்டாவதாகக் கூறப்பட்ட இருண்ட சூழல் ஏற்படுவதற்கான சாத்தியமே அதிகம். சென்ற வாரத்தைக் காட்டிலும் இன்று அந்த சாத்தியம் அதிகரித்திருக்கிறது.

ஏன்? ஏனென்றால் தேசங்களுக்கிடையே ஒத்துழைப்பு இல்லை. சிக்கனத்துக்கான திட்டங்கள்தான் உள்ளன. வளர்ச்சிக்குத் திட்டமில்லை. கடன் வாங்கிப் பொருளாதார ஊக்குவிப்பு நடவடிக்கைகளைத் தூண்ட முடிந்த நாடுகள்கூட, கடன் வாங்கத் தயங்குகின்றன. யூரோ என்ற ஒற்றை நாணயம் குலைந்து விடாமல் தடுக்க வேண்டுமானால், ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான ஐக்கியத்தை விரைவுபடுத்த வேண்டும். இதற்குத் தேவையான அரசியல் உறுதி ஐரோப்பிய ஒன்றியத்திடம் இல்லை.

பண்டங்களின் விலைகள் குறைந்து வருகின்றன. ஆனால், அது ஒன்று மட்டும்தான் நல்ல செய்தி. மற்றபடி 9, ஆகஸ்டு, 2007 அன்று தொடங்கிய நெருக்கடி இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதில் பாதி தூரத்தைக்கூட நாம் இன்னும் கடக்கவில்லை. அந்த நெருக்கடி அபாயகரமான புதிய இடைக்கட்டத்திற்குள் நுழைந்திருக்கிறது. ●



படிப்பகம்

www.padippakam.com



# ஆலயத் தீண்டாமைக்கு எதிராகச் சிவனடியார்களின் போராட்டம்! ஒடுங்கியது பார்ப்பன சிவாச்சாரியார்களின் கொட்டம்!!

**க**டலூர் மாவட்டம் விருத்தாசலத்தில் உள்ள விருத்தகிரீஸ்வரர் ஆலயத்தில் கடந்த ஐந்தாண்டுகளாக ஆருத்ரா தரிசனம் உள்ளிட்ட விழாக்களின் போதும், தினசரி இரவு 8.30 மணியளவில் நடக்கும் அர்த்தஜாம பூசையின் போதும் பழம்பெரும் இசைக்கருவிகளான உடன், கொம்பு, சங்கு, நெடுந்தாரை, எக்காளம், உடுக்கை முதலானவற்றை வாசித்து இளைஞர்களான சிவனடியார்கள் வழிபட்டு வந்தனர். கைலாய இசை எனப்படும் இந்த இசையின் காரணமாக இரவில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்தது. சாமானிய மக்களும் சிவனடியார்களும் வரவேற்று ஆதரித்த இந்த இசை, கோயில் சிவாச்சாரியார்களான பார்ப்பனர்களின் கண்களை மட்டும் உறுத்தியது. ஊர் பெரிய மனிதர்கள் எனப்படுவோர் மூலம் கோயில் நிர்வாக அதிகாரியிடம் பார்ப்பனர்கள் முறையிட்டதன் பேரில், அதிக இரைச்சலாகவும் பொதுமக்களுக்கு இடையூறாகவும் இருப்பதால் சிவனடியார்கள் இந்தக் கருவிகளை இசைக்கக் கூடாது என்று 13.7.2011 அன்று நிர்வாக அதிகாரி தடைவிதித்தார்.

இந்த அநீதியான உத்தரவுக்கு எதிராகச் சிவனடியார்கள் விழுப்புரம் இணை ஆணையரிடம் முறையிட்டனர். கடந்த ஆறு மாத காலமாக அவர்கள் இழுத்தடிக்கப்பட்டதைத் தவிர எந்தப் பலனும் ஏற்படவில்லை. இந்நிலையில், 8.1.2012 அன்று ஆருத்ரா தரிசனமும் சாமி புறப்பாடும் நடைபெறவுள்ள நிலையில், கைலாய இசையை வாசிக்க முடியாமல் துவண்டிருந்த சிவனடியார்கள் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தை அணுகி, அந்நாளில் சாமி புறப்படும் முன்பு தாங்கள் இசைக்க உதவுமாறும் ஆதரிக்குமாறும் கோரினர். இந்நியாயமான கோரிக்கையை ஆதரித்து, மனித உரிமைப் பாதுகாப்பு மையமும் சிவனடியார்களின் போராட்டத்துக்கு ஆதரவாக நின்றது.

ஆருத்ரா தரிசனத்தன்று இசைக் கருவிகளுடன் சிவனடியார்கள் தயாராக நிற்க, பக்தர்களில் ஒரு பிரிவினர் கைலாய இசையை வாசிக்கலாம் என்றும், மற்றொரு பிரிவினர் கூடாது என்றும் வாதிட்டு இரண்டாகப் பிரிந்தனர். பல்லக்கில் ஏற்றப்பட்ட சிவபெருமான் வழிகிடைக்காமல் காத்திருந்தார். பின்னர் அ.தி.மு.க. நகரச் செயலாளர்கள், பா.ம.க. கவுன்சிலர், சாராயக்கடை முதலாளிகள் முதலானோர் இசைக் கருவிகளுடன் நின்றிருந்த சிவனடியார்களைப் பலவந்தமாக அப்புறப்படுத்த முயன்றபோது, ம.உ.பா.மையத்தின் வழக்குரைஞர்களான புஷ்பதேவன், செந்தில், காசி விசுவநாதன் மற்றும் நிர்வாகிகள் இதைத் தடுத்தனர். தாங்கள் இசைக்கருவிகளை வாசிக்கவும், தங்களை அப்புறப்படுத்த முயன்ற அ.தி.மு.க. பிரமுகர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் சிவனடியார்கள் தரையில் படுத்துப் போராட்டம் நடத்தினர்.

‘‘இசைக்கருவிகளை இசைக்கவும் இறைவனை வழிபடவும் யாருடைய அனுமதியும் தேவையில்லை; திருவண்ணாமலை கோயிலிலும் சிதம்பரம் நடராசர்



படிப்பகம்

www.padippakam.com

கோயிலிலும் இதே இசைக்கருவிகள் வாசிக்கப்படு கின்றன; அரசு அதற்குச் சம்பளமும் கொடுக்கிறது; அங் கெல்லாம் இரைச்சலோ பொதுமக்களுக்கு இடையூறோ ஏற்படாதபோது, இங்கு மட்டும் இடையூறு ஏற்படுவ தாகக் கூறும் நிர்வாக அதிகாரியின் உத்தரவு ஒருதலைப் பட்சமானது; உள்நோக்கம் கொண்டது'' என்று ம.உ.பா.மையத்தினர் வாதிட்டனர். கோயில் ஆகம விதிப்படி வாசிக்கக் கூடாது என்று வாதிட்ட சிவாச்சாரி யார்களிடம், ''கடந்த ஆறு வருடங்களாக தடுக்காத ஆக மம் இன்று ஏன் தடுக்கிறது? ஆகமத்தை மீறிவிட்டதாக நீங்கள் புகார் கொடுங்கள்; அதை வழக்கு மன்றத்தில் சந்திக்கத் தயாராக உள்ளோம்'' என்று ம.உ.பா.மையத் தினர் வாதிட்டனர். போலீசும் சிவாச்சாரியார்களும் ஊர் பெரிய மனிதர்களும் செய்வதறியாது திகைத்தனர். பின்னர் இன்றைக்கு வாசிக்க வேண்டாம், நாளை கோட் டாட்சியர் முன்னிலையில் பேசித் தீர்க்கலாம் என்று நைச் சியமாகப் பேசிப் பார்த்தனர். ஆனால், இளைஞர்களான சிவனடியார்கள் உறுதியாக நின்று, ம.உ.பா.மையத்தின் துணையுடன் இசைக்கருவிகளை வாசித்தனர்.

இந்த இசைக்கருவிகளை வாசிப்பவர்கள் தாழ்த்தப் பட்ட மற்றும் மிகவும் பிற்பட்டோராவர். இவர்களையும் இவர்களது இசைக்கருவிகளையும் இழிவாகக் கருதும் பார்ப்பன சிவாச்சாரியார்கள் தங்களது ஆட்சி அதிகாரத் தில் இருக்கும் தைரியத்தில்தான் இப்படி ஒரு தீண் டாமையைச் செயல்படுத்தக் கிளம்பினர். ஒடுக்கப்படும் 'இந்துக்களை' ஆர்.எஸ்.எஸ். முதலான இந்துவெறியர் கள் பாதுகாக்க மாட்டார்கள் என்பதைப் புரிந்து கொண் டுள்ள சிவனடியார்கள், ம.உ.பா.மையத்தின் ஆதரவுடன் போராடி முதற்கட்ட வெற்றியைச் சாதித்துள்ளனர்.

இந்தப் போராட்டச் செய்தியைக் கேட்டு அருகாமை யிலுள்ள ஊர்களிலிருந்து திரளாக சிவனடியார்கள் 9.1.2012 அன்று இரவு பூசையின்போது திரண்டனர். கைலாய இசையுடன் இறைவனை வழிபடும் உரிமையைப் போராடிப் பெற்ற மகிழ்ச்சி அனைவரது முகத்திலும் தாண்டவமாடியது.

**தகவல்: மனித உரிமைப் பாதுகாப்பு மையம், விருத்தாசலம்.**

# உரிமைக்காகப் போராடும் தொழிலாளர்களைப் பழிவாங்கும் கமாஸ் வெக்ட்ரா!

ஓசூர் சிப்காட்-1 பகுதியில் இயங்கிவரும் கனரக வாகன உற்பத்தி நிறுவனமான கமாஸ் வெக்ட்ரா மோட் டார்ஸ் ஆலையில் கடந்த 13 வருடங்களாகப் பணிபுரிந்த 15 தொழிலாளர்கள் நிர்வாகத்தால் நைச்சியமான முறை யில் வஞ்சிக்கப்பட்டுள்ளனர். இவர்களை அத்திப்பள்ளி யிலுள்ள துணை நிறுவனம் என்ற பெயரிலுள்ள போலி நிறுவனத்துக்கு அனுப்பிய நிர்வாகம், பின்னர் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளவதாக அறிவித்தது. ஆனால், ஏறத்தாழ இரண்டாண்டுகளாகியும் நிர்வாகம் இவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. கடந்த 18 மாதங்களாக பு.ஜ.தொ.மு.வின் இணைப்புச் சங்கமான இந்த ஆலையின் தொழிற்சங்கத்தின் சார்பில் நிர்வாகத்துடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும்போதே, நிர்வாகம் அயல்பணியைத் (அவுட்சோர்சிங்) திணித்து, நிரந்தரத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வதில் இறங்கியுள்ளது. நிர்வாகத்தின் இப்பழிவாங்கலுக்கும் அநீதிக்கும் எதிராக, வேலை கேட்டுக் காத்திருந்த 15 தொழிலாளர்களும் கடந்த 6.1.2012 முதலாக உள்ளிருப்புப் போராட்டத்தை நடத்தி வருகின் றனர்.

தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மாவட்டங்களின் பு.ஜ.தொ.மு.வும், கமாஸ் வெக்ட்ரா மோட்டார்ஸ் லிமி டெட் கிளையின் தொழிலாளர் சங்கமும் இணைந்து இந் நியாயமான போராட்டத்துக்கு ஆதரவாக இதர ஆலைத் தொழிலாளர்களை அணிதிரட்டி, 9.1.2012 அன்று ஓசூர் ராம்நகர் அண்ணாசிலை அருகில் ஆர்ப்பாட்டதை நடத் தின. தனியார்மய - தாராளமயத்தால் தொழில் வளர்ச்சி அதிகரிக்கவில்லை; மாறாக, தொழிலாளர்களின் உரிமைகள் பறிப்பும் வேலையிழப்பும் முத லாளித்துவப் பயங்கரவாதமும் தான் பெருகிவருகிறது என்பதை உணர்த்தி, வீதியில் வீசியெறி யப்பட்டுள்ள தொழிலாளர் களின் போராட்டத்தை முன் னெடுத்துச் செல்ல அறைகூவிய இந்த ஆர்ப்பாட்டம், இவ்வட் டாரமெங்கும் பெருத்த தாக் கத்தை ஏற்படுத்தியுள்ளது.




– பு.ஜ. செய்தியாளர், ஓசூர்.



படிப்பகம்

www.padippakam.com

## தானே புயல் பேரழிவு:

# தேவை, அற்ப நிவாரணமல்ல; மறுவாழ்வு!

**தானே புயலால் பாதிக்கப்பட்டோருக்கு உரிய நிவாரண உதவி மட்டுமல்ல, மறுவாழ்வுக்கான உதவியும் செய்யப்பட வேண்டும்.**

வேரோடு சரிந்து கிடக்கும் மரங்கள், கற்குவியலாகச் சிதிலமடைந்து கிடக்கும் வீடுகள், நொறுங்கிக் கிடக்கும் படகுகள், பெயர்ந்து கிடக்கும் சாலைகள், உப்புநீரில் பாழ்பட்டுக் கிடக்கும் விளைநிலங்கள், விழுந்து கிடக்கும் மின்கம்பங்கள் - எனப் போர் நடந்த பூமியைப் போல் காட்சியளிக்கின்றன தமிழகத்தின் கடலூர், நாகை, திருவாரூர் மாவட்டங்களின் கடலோரப் பகுதிகள். கடந்த டிசம்பர் இறுதியில் 136 கி.மீ. வேகத்தில் தாக்கிய ''தானே'' புயலால் உணவு, உடை, குடிநீர், சாலை வசதி, மின்சாரம், படகுகள், மரங்கள், விளைநிலங்கள் என எல்லாவற்றையும் பறிகொடுத்துவிட்டு, எதற்கும் வழியின்றி ஏறத்தாழ 15 இலட்சம் மக்கள் பரிதவிக்கின்றனர். உயிருக்கு மோசமான பாதிப்பை சுனாமி ஏற்படுத்தியது என்றால், வாழ்வைப் பல தலைமுறைகளுக்குப் பின்னுக்குத் தள்ளி, அதைவிட மோசமான பேரழிவை தானே புயல் ஏற்படுத்தியுள்ளது.

''தானே'' புயல் - மழையினால் 40 - க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 4 இலட்சம் வீடுகள் சேதமடைந்துள்ளன. 2.24 ஹெக்டேர் நிலங்கள் பாழாகியுள்ளன. 45,000 மின்கம்பங்களும் 4,500 மின்மாற்றிகளும் சாய்ந்துவிட்டன. செல்போன் கோபுரங்கள் விழுந்து கிடக்கின்றன. 30,000 ஹெக்டேர் பரப்பளவில் இருந்த முந்திரித் தோப்புகளில் 95 சதவீத மரங்கள் புயலில் சாய்ந்துவிட்டன. 811 ஹெக்டேர் பரப்பளவில் இருந்த பலா விவசாயத்தில் ஏறத்தாழ் 505 ஹெக்டேர் பரப்பிலான மரங்கள் முற்றிலும் விழுந்துவிட்டன. 3 இலட்சம் ஏக்கர் நெல், மணிலா, கரும்பு, பருத்தி, சோளம் உள்ளிட்ட பயிர் வகைகள் நாசமாகியுள்ளன. ஏறத்தாழ 43,000 விவசாயிகள் பல தலைமுறைகளுக்குத் தங்களது வாழ்வாதாரங்களை இழந்திருக்கிறார்கள்.

கடலூர் மாவட்டம் தாண்டவராயன் சோழகன் பேட்டை முதல் நல்லவாடு வரை 48 கிராமங்களைச் சேர்ந்த சுமார் ஒரு இலட்சம் மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் உள்ளனர். ''தானே'' புயலால் மீனவர்களின் 82 விசைப்படகுகள், 270 கண்ணாடி இழைப் படகுகள், 729 கட்டுமரங்கள் சேதமடைந்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது. ஆனால், சேதத்தின் அளவு இதை விட அதிகமானது. மொத்தத்தில் இக்கடும் புயலால் விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் ரூ.10,000 கோடிக்கும் மேலாக சேதமாகியிருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது. கடலூர் சிப்காட், சிட்கோ தொழிற்பேட்டைப் பகுதிகளில் பல்வேறு சிறு தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், தொழிலாளர்கள் வேலையின்றித் தவிக்கின்றனர். குழந்தைகளுக்குப் பள்ளி இல்லை, நோயாளிகளுக்கு மருத்துவமனை இல்லை, விவசாயிகளுக்கு விளைநிலமில்லை, மீனவர்களுக்குப் படகில்லை. யாருக்கும் எதுவுமில்லை என்பதே கடலூரின் இன்றைய நிலை.

வேரோடு சரிந்துகிடக்கும் மரங்கள்; நாசமாகிவிட்ட விவசாயம்: வாழ்வாதாரங்களைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கிய ''தானே'' புயலின் கோரம்.



இப்பேரழிவு ஏற்பட்டு ஒரு வார காலத்துக்குப் பின்னர்தான் அந்தப் பகுதிகளுக்கு முதல்வர் ஜெயலலிதா பார்வையிடச் சென்றார். மக்கள் மீது தனக்குக் கரிசனம் உள்ளதாகக் கணக்குக் காட்ட, கடலூரில் ஒரேயொரு இடத்தில் அரசாங்கம் ஏற்பாடு செய்த இடத்தில் அற்பமான நிவாரண உதவிகளைக் கொடுத்து



படிப்பகம்

www.padippakam.com

விட்டு, உடனே ஹெலிகாப்டரில் பறந்துவிட்டார்.

அரசு ஒதுக்கியுள்ள புயல் நிவாரணத் தொகை ரூ.700 கோடிதான். இதை வைத்துக் கொண்டு ஒரு வட்டத்திலுள்ள கிராமங்களுக்குக் கூட நிவாரண உதவியையோ, மறு சீரமைப்பையோ செய்யவே முடியாது. முந்திரி போன்றவற்றை பணப்பயிர் என அரசாங்கம் வகைப்படுத்தியிருப்பதால், வசதியாக தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறது. ஒரு ஹெக்டேர் வாழைக்கு ரூ.7500/- ம், முந்திரிக்கு ரூ.9000/- மும் நிவாரணத் தொகையாக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையைக் கொண்டு சாய்ந்து கிடக்கும் மரங்களைக்கூட அகற்ற முடியாது. புயலால் வீழ்ந்து கிடக்கும் மரங்களை அகற்றினால்தான் புதிய கன்றுகளை நட முடியும் என்றுள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல், இலவச மரக்கன்றுகள், பயிர்களுக்கான ஓராண்டு இலவசப் பராமரிப்பு முதலானவற்றைக் கோமாளித்தனமாக அறிவித்துள்ளது, ஜெயலலிதா அரசு.



சுனாமி ஏற்படுத்திய பேரழிவைவிடக் கோரமான பாதிப்பு: புதுவையில் புயலால் சேதமடைந்து கிடக்கும் படகுகள்.

வீழ்ந்து கிடக்கும் மரங்களை அகற்றுவது ஏழை விவசாயிகளுக்குப் பெரும் சுமை. 5,6 பேரை வேலைக்கு அமர்த்தினால்தான் ஒரு மரத்தை வெட்டி அப்புறப்படுத்த முடியும். ஒரு நபருக்குத் தினக்கூலியாக ரூ. 300/- தர வேண்டியுள்ளது. ஆனால், மரத்துக்கான விலையோ ஒரு டன்னுக்கு ரூ.500 கூட கிடைப்பதில்லை. பலா, முந்திரி மரக்கன்றுகளை நட்டு, அது வளர்ந்து மகசூலைத் தர ஏறத்தாழ 10,15 ஆண்டுகளாகும். வீழ்ந்து கிடக்கும் மரங்களை அகற்றுவதற்கே விவசாயிகள் தங்கள் சொத்தை விற்றால்தான் சாத்தியம் என்ற நிலைமைதான் உள்ளது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு அழிந்துவிட்ட முந்திரிக் காடுகளை ரியல் எஸ்டேட்டுகளாக மாற்றி, அவற்றைக் கைப்பற்ற நிலமுதலைகள் அலைகிறார்கள். இதனால் முந்திரித் தோப்பைச் சார்ந்துள்ள உழைக்கும் மக்கள் தங்கள் ஒட்டுமொத்த நிலத்தையும் பறிகொடுத்துவிட்டு ஊரை விட்டு பிழைப்புக்காக அலைய வேண்டிய அபாயத்தில் தள்ளப்பட்டுள்ளனர். முந்திரி விவசாயத்தைச் சார்ந்துள்ள விவசாயிகள் மட்டுமின்றி, அதன் பழங்கள், கொட்டைகளைக் களைதல், பருப்பு உடைத்தல், முந்திரி எண்ணெய் எடுத்தல் முதலான பல தொழில்களை நம்பியுள்ள ஆயிரக்கணக்கானோரின் வாழ்வும் பாதாளத்தில் தள்ளப்பட்டுள்ளது.

சேதமடைந்த வீடுகளுக்கு மட்டும் நிவாரணம் என்று முதலில் வெளியான அரசின் அறிவிப்பு, பின்னர் பச்சை வண்ண குடும்ப அட்டை உள்ள அனைவருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. ''கடலூர் நகராட்சிப் பகுதியில் உணவுப் பொருட்கள் வழங்கல் துறை தரும் தகவலின்படி, மொத்த குடும்ப அட்டைகள் 48,240 என்றும், ஆனால், 50 ஆயிரம் பேருக்கு மேல் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அரசுத் துறைகளிடேயே முரண்பாடான புயல் நிவாரணப் பட்டியல்கள் உள்ளதாகவும், இடைத்தரகர்கள் மக்களை மோசடி செய்வதாகவும், இத்தகைய குளறுபடிகள், மோசடிகள், சுருட்டல்கள் பற்றி இலஞ்ச ஒழிப்புத் துறை விசாரித்தால்தான் அரசு தனது நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்'' என்றும் ஜெயலலிதா ஆதரவு நாளேடான தினமணியே (25.12.2012) எழுதுகிறது. உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அளிப்பதுதான் புயல் நிவாரணப் பட்டியலாகி விட்டது என்றும் அரசு வழங்கிய அற்ப நிவாரணம் அ.தி.மு.க. நிவாரணமாக மாறிவிட்டது என்றும் ஊடகங்கள் குற்றம் சாட்டுகின்றன.

அரசு அறிவித்த நிவாரணம் கூட முறையாகக் கிடைக்காத நிலையில் கடலூர், பண்ருட்டி வட்டார கிராமங்களில் பொங்கல் விழாவைப் புறக்கணித்துக் கருப்புக் கொடியேற்றி, மக்கள் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். சேதமடைந்த அனைத்துப் படகுகளுக்கும் புதுச்சேரி மாநிலத்தில் அளிக்கப்பட்டுள்ளதைப் போல உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரும் கடலூர் வட்டார மீனவர்கள், அதுவரை கடலுக்குச் செல்ல மாட்டோம் என்று போராடினர். புதுச்சேரி மீனவர்களும் மீன்பிடிக்கச் செல்லாமல், கடலூர் மீனவர்களுக்கு ஆதரவாகப் போராடினர். மீனவர்கள் கோருவது போல நிவாரணம் வழங்க அரசாணையில் இடமில்லை என்றும், கோரிக்கைகளை அரசுக்குத் தெரிவிப்பதாகவும் சமரசப் பேச்சுவார்த்தை நடத்திய துணை ஆட்சியர் அறிவித்துள்ளார். இதனால், அரசை நம்பிப் பலனில்லை என்று வேறு வழியின்றி இப்போது வேதனையுடன் மீனவர்கள் தமது பிழைப்பைத் தொடர்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



அரசின் அலட்சியத்தை எதிர்த்தும் மறுவாழ்வுக்கான கோரிக்கைகளை வலியுறுத்தியும் வாழ்விழந்த விவசாயிகள் விருத்தாசலத்தில் நடத்திய பேரணி.

நாட்டு முன்னேற்றம், வேலை வாய்ப்பு, வளர்ச்சி என்ற பெயரில் பல்லாயிரம் கோடிகளை உள்நாட்டு - வெளிநாட்டு முதலாளிகளுக்கு வாரியிறைக்கும் அரசு, கோடிக்கணக்கான மக்கள் வாழ்விழந்து நிற்கும் போது அற்ப நிவாரணத்துடன் தனது கடமை முடிந்ததாகக் கருதுகிறது. சாமானிய மக்களின் அடிப்படை வசதிகளை அறவே புறக்கணித்துவரும் அரசு, மறுபுறம் உள்நாட்டு - வெளிநாட்டு பெருமுதலாளித்துவ கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளிக்கும் சலுகைகளையும் மானியங்களையும் ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. கடந்த 2008-09 ஆம் ஆண்டில் இந்தத் தொகை ரூ.4.2 இலட்சம் கோடியாகவும், 2009-10ஆம் ஆண்டில் 4.37 இலட்சம் கோடியாகவும் இருந்தது. கடந்த 2011, மார்ச் 31-ஆம் தேதியுடன் முடிவடைந்த கடந்த நிதியாண்டில் இது 4.6 இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. அதேநேரத்தில் ஏழைகளுக்கும் விவசாயிகளுக்கும் அளிக்கப்படும் மானியங்கள் அடுத்தடுத்து குறைந்து கொண்டே வருகின்றன. கடந்த நிதியாண்டில் ரூ. 1.54 இலட்சம் கோடியாக இருந்த மானியங்கள் 2011-12ஆம் ஆண்டில் 1.44 இலட்சம் கோடியாகக் குறைந்துள்ளது.

புயலால் ஏற்பட்டுள்ள பேரழிவுகளைச் சீரமைக்க இடைக்கால நிவாரணமாக ரூ.500 கோடியைக் கொடுத்துவிட்டு, மத்தியக் குழுவை ஆய்வுக்கு அனுப்பியது மைய அரசு. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் சேதங்களை மதிப்பீடு செய்யச் சென்ற அதிகாரிகள் குழுவிலிருந்த வடநாட்டு அதிகாரி ஒருவர், ''முந்திரின்னா கிழங்கா?'' என்று அறிவுபூர்வமாகக் கேள்வி எழுப்பியுள்ளார். புயலால் சுமார் ரூ.5800 கோடி அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், அதற்கான நிதியை மைய அரசு அளிக்க வேண்டும் என்றும் மத்தியக் குழுவிடம் தலைமைச் செயலர் அறிக்கை கொடுத்துள்ளார். ஆனாலும் இன்றுவரை கூடுதல் நிதி ஒதுக்க மைய அரசு முன்வரவில்லை.

சுனாமி தாக்கிய மறு ஆண்டில் பேரிடர் மேலாண்மை ஆணையம் மைய அரசால் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்டங்கள் தோறும் இந்த ஆணையம் செயல்பட வேண்டும். ஆனால் தமிழக அரசு, இதுவரை தனியாக ஒரு ஆணையத்தைக் கூட உருவாக்கவில்லை. மாறாக, பேரிடர் மேலாண்மை மற்றும் துயர் துடைப்புத் துறை என்ற பெயரில் வருவாய்த்துறையின் கீழ் இயக்கி வருகிறது. சுனாமி தாக்கி ஏழாண்டுகளுக்குப் பின்னர், தானே புயல் தாக்கியுள்ளது. இடைப்பட்ட காலத்தில் பேரிடரை எதிர்கொள்ள எந்தத் தயாரிப்பும் இல்லை. பேரிடர் தடுப்பு ஒருபுறமிருக்கட்டும், மிக அவசியமான அடிப்படைப் பணியான குப்பைகளை அகற்றுவது முதலான துப்புரவுப் பணிகள்கூட ஆட்சியாளர்களால் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. சென்னை நகரிலேயே மாதக்கணக்கில் குப்பைகள் அகற்றப்படாமல் மலைபோலக் குவிந்து கிடக்கின்றன. சாதாரண மழைக்கே சாலைகள் சிதைந்து கிடப்பதோடு, மழைநீர் பல பகுதிகளில் கழிவு நீருடன் கலந்து நோயைப் பரப்பிக் கொண்டிருக்கிறது. தலைநகரிலேயே இந்த நிலைமை என்றால், கிராமப்புறப் பகுதிகளை அரசு எந்த அளவுக்குப் புறக்கணிக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்குக் கருணை அடிப்படையில் அற்ப நிவாரணம் அளிப்பது என்கிற கோணத்தில்தான் ஓட்டுக் கட்சிகளும் ஆட்சியாளர்களும் இந்தப் பிரச்சினையை அணுகுகிறார்கள். அதனால்தான், ஒரே மாதத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப்பணிகளைச் செய்து உலகச் சாதனை படைத்துள்ளதாகச் சட்டமன்றத்திலேயே பெருமைப்பட்டுக் கொள்கிறார், ஜெயலலிதா. பாதிக்கப்பட்டுள்ள மக்களும் பேச்சுரிமை, எழுத்துரிமை போல மறுவாழ்வுரிமை என்பது தமது அடிப்படை உரிமை என்ற கோணத்தில் பார்க்காமல், கூடுதல் நிவாரணம் என்கிற கோணத்தில்தான் அணுகுகின்றனர். ஆனால், நடந்திருப்பது பேரழிவு. புயலால் வாழ்விழந்து நிற்கும் மக்களின் தேவை அற்ப நிவாரணமல்ல; மறுவாழ்வு. கருணையினாலோ, அற்ப நிவாரணங்களாலோ அதை ஒருக்காலும் மீட்டெடுக்க முடியாது. வாழ்விழந்து நிற்கும் மக்களின் குமுறலை எதிரொலிக்கும் வண்ணம் புரட்சிகர - ஜனநாயக இயக்கங்கள் மறுவாழ்வுக்கான போராட்டங்களைக் கட்டியமைத்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இதுதான் உண்மையான நிவாரணப்பணியாக, அரசியல் பணியாக இருக்க முடியும்.

● குமார்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

குளத்தில் தாங்கள் கண்ட மக்களின் போர்க் குணத்தையும் விளக்கினார். அணு உலைக்கு எதிரான மக்களின் போராட்ட வரலாறை எழுத்தாளர் முத்துக் கிருஷ்ணன் தொகுத்து வழங்கினார். கோவை மூத்த வழக்குரைஞர் முருகேசன் உரைக்குப் பின்னர் சிறப்புரையாற்றிய ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப் பாளரான வழக்குரைஞர் ராஜூ, அணு உலைக்கு எதிராக நாம் ஏன் போராட வேண்டும், எப்படிப் போராட வேண்டும் என்பதை போபால் படுகொலையை உதாரணமாகக் காட்டி விளக்கினார். சட்டக் கல்லூரி மாணவர்கள், தொழிலாளர்கள், பல்வேறு அரசியல் கட்சியினர் எனப் பலரும் பங்கேற்ற இக்கருத்தரங்கம், பார்வையாளர்களைக் களத்தில் இறங்கிச் செயல்பட அறைகூவுவதாக அமைந்தது.



போடியில்...

முல்லைப் பெரியாறு அணையைப் பாதுகாக்க தங்கள் இன்னுயிரை ஈந்து தியாகிகளான தேனி ஜெயப்பிரகாஷ் நாராயணன், சின்னமனூர் ராமமூர்த்தி, சீலையம்பட்டி சேகர் ஆகியோரின் நினைவேந்தல் பொதுக்கூட்டம் வி.வி.மு.சார்பில் 12.1.2012 அன்று போடி வ.உ.சி. சிலை அருகில் நடைபெற்றது. தேனி மாவட்ட வி.வி.மு.செயலர் தோழர் மோகன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜூ, மதுரை உயர் நீதிமன்ற வழக்குரைஞர்களின் சங்கத் தலைவர் திருநாவுக்கரசு, போடி வழக்குரைஞர் ராதாகிருஷ்ணன், தேனி வழக்குரைஞர் தமிழ்ச்செல்வன், பெரியாறு அணை மீட்புக் குழுவின் சார்பாக உப்புக்கோட்டை நாகராஜ் ஆகியோர், இத் தியாகிகளின் மரணம் தமிழகத்தில் போராட்ட உணர்வை எழுச்சி கொள்ளச் செய்துள்ளதையும், அவர்களின் இலட்சியத்தை நெஞ்சிலேந்திப் போராடுவதுதான் அவர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி என்பதை உணர்த்தியும், முல்லைப் பெரியாறு அணையில் தமிழகத்தின் நியாயவுரிமையை நிலைநாட்ட தமிழகத்திலிருந்து கேரளாவுக்குச் செல்லும் 13 வழித்தடங்களை மூடிப் பொருளாதாரத் தடை விதிக்கக் கோரி தமிழக அரசை நிர்பந்திக்கும் வகையில் போராட்டத்தைத் தொடர அறைகூவியும் எழுச்சியுரையாற்றினர். மறைந்த தியாகிகளுக்கு கூட்டத்தினர் அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி, உணர்ச்சி பூர்வமாக நடந்த இந்தக் கூட்டமும் ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சியும் மக்களைச் செயலுக்கு உந்துவதாக அமைந்தன.


காளையார்கோவிலில்...

ம.உ.பா. மையத்தின் திருநெல்வேலி கிளை சார்பில் 21.1.2012 அன்று பாளை மார்க்கெட் ஜவகர் திடலிலும், தூத்துக்குடி கிளை சார்பில் 1.2.2012 அன்று இராஜாஜி பூங்கா அருகிலும் கூடங்குளம் அணு உலையை மூடக் கோரி விண்ணதிரும் முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. கூடங்குளம் அணு உலை குறித்துப் பொய்ப்பிரச்சாரத்தை நடத்திவரும் அப்துல் கலாம் தொடங்கி தினமலம் உள்ளிட்ட அனைத்து அமெரிக்க அடிவருடிகளுக்கும், இந்து முன்னணி உள்ளிட்ட காலிகளுக்கும் ஆப்பறைவதாகவும், அணு உலைகளால் ஏற்படும் கோரமான விளைவுகளைக் காட்சி விளக்கப் படங்களுடன் சித்தரித்துக் காட்டியும் நடந்த இந்த ஆர்ப்பாட்டங்களில் வழக்குரைஞர்கள், எழுத்தாளர்கள் உள்ளிட்ட பல்வேறு ஜனநாயக இயக்கத்தினரும் திரளாகக் கலந்து கொண்டனர். இறுதியில் ம.க.இ.க. மையக் கலைக்குழுவினர் நாடகமும் புரட்சிகரப் பாடல்களும் பார்வையாளர்களைப் போராட அறைகூவின.

சேலத்தில், ''முல்லைப் பெரியாறு அணையில் தமிழகத்தின் நியாயவுரிமைக்காகப் போராடுவோம்! பன்னாட்டு முதலாளிகளின் இலாபத்திற்கான, மனித குலத்துக்கு எதிரான கூடங்குளம் அணு உலையை மூடுவோம்!'' என்ற தலைப்பில் 23.1.2012 அன்று ம.உ.பா.மையத்தின் சார்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. மாவட்டக் கிளைச் செயலர் வழக்குரைஞர் மாயன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், எழுத்தாளர் முத்துக்கிருஷ்ணன், மூத்த வழக்குரைஞர் ப.பா. மோகன், ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜூ ஆகியோர் சிறப்புரையாற்றினர். அப்துல்கலாம் என்ற அரசவைக் கோமாளியின் வாதங்களை அம்பலப்படுத்துவதாகவும், அணு உலைகளால் ஏற்படும் பேரழிவுகளை விளக்குவதாகவும் அமைந்த இக்கருத்தரங்கம் பார்வையாளர்களுக்கு உண்மை நிலையைப் புரிய வைத்துப் போராட அறைகூவுவதாக அமைந்தது.

கூடங்குளம் அணு உலையை இழுத்து மூடவும், முல்லைப் பெரியாறு அணையில் தமிழகத்தின் நியாயவுரிமையை நிலைநாட்டவும் போராட அறைகூவி 23.1.2012 அன்று சென்னை - சைதாப்பேட்டை ஐந்து விளக்கு அருகில் பு.ஜ.தொ.மு. காஞ்சிபுரம் கிழக்கு மாவட்டக் கிளை சார்பில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. அணு உலை குறித்து ஆளும் வர்க்கங்களின் பொய்ப்பிரச்சாரங்களையும் இரட்டை வேடம் போடும் தமிழக அரசையும் அம்பலப்படுத்திக் காட்டிய இக்கூட்டம் மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதாக அமைந்தது.

கூடங்குளம் அணு உலையை இயக்க மூர்க்கமாக களத்தில் இறங்கியுள்ள மைய அரசையும் ஆளும் வர்க்கக் கட்சிகளையும் திரைகிழித்தும், முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் இரட்டை வேடம் போடும் தேசியக் கட்சிகளைத் தோலுரித்தும், தீவிரமாகிவரும் மறுகாலனியத் தாக்குதலை எதிர்த்தும் நடந்துவரும் இப்பிரச்சார இயக்கம் தமிழகமெங்கும் உழைக்கும் மக்களின் பேராதரவுடன் சூறாவளியாகப் பற்றிப் படர்ந்து வருகிறது.

-பு.ஜ.செய்தியாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/12-14. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14

## மக்களின் உயிருக்கும்
## நாட்டின் அரைகுறை இறையாண்மைக்கும்
## உலைவைக்கும்

# கூடங்குளம் அணு உலையை இழுத்து மூடு!

# பேரணி - முற்றுகை!



**11.02.2012**

**காலை 10.30 மணி**

**ஜவகர் திடல்**

**பாளையங்கோட்டை மார்க்கெட்**

**திருநெல்வேலி**

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி**
**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி**
**பெண்கள் விடுதலை முன்னணி**

படிப்பகம்